வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 14.03.2023 செவ்வாய்க்கிழமை | இதழ் : 95 | பக்கங்கள் : 16






# தனியான இருட்டறைக்குள் சித்திரவதைப்படுகிறோம்!

## ராஜீவ் கொலையில் விடுதலையான இலங்கையர் முதல்வருக்கு கடிதம்



திருச்சி, மார்ச் 14

திருச்சி சிறப்பு முகாமில் இருட்டு அறைக்குள் அடைக்கப்பட்டுள்ளோம். சிறைவாழ்வில்கூட அனுபவிக்காத சித்திரவதைகளை எதிர்கொள்கிறோம் எம்மை எமது நாட்டுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரி தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலினுக்கு இலங்கை தமிழரான ரொபேர்ட் பயஸ் கடிதம் எழுதியுள்ளார். அத்துடன், அவர் உணவு தவிர்ப்பு போராட்டத்தையும் ஆரம்பித்துள்ளார். 15

# கிறிஸ்தவ சபைக்குள் பைபிளுடன் நுழைந்த வேற்று மதத்தவர் கைது!

மட்டக்களப்பு, மார்ச் 14

மட்டக்களப்பு நகரிலுள்ள கிறிஸ்தவ சபை ஒன்றுக்குள் பைபிளுடன் நடமாடிய ஒருவர் கைது செய்யப்பட்டார் என்று மாவட்ட தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

“கைது செய்யப்பட்டவர் முஸ்லிம் இனத்தவர் என்பதுடன் கிண்ணியாவை சேர்ந்த 32 வயது நபர்”, என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

கைதானவர் வெளிநாட்டிலிருந்து திரும்பிய வராவார். இவர் தனக்கிருக்கும் நோயை குணப்படுத்துவதற்காக சீயோன் தேவாலயத்தை தொடர்பு கொண்டுள் ளார் என்றும் விசேட 15

# மாகாண தேர்தலை பிற்போட்ட சஜித், அநுர வாக்குரிமை பற்றி பேச உரிமையற்றோர்!

## சாகர காரியவசம் எம். பி. சாட்டை



கொழும்பு, மார்ச் 14

மாகாண சபைத் தேர்தலை காலவரையறையின்றி நல்லாட்சி அரசாங்கம் பிற்போடுவதற்கு சஜித் பிரேமதாஸ, அநுர குமார திஸநாயக்க ஆகியோர் ஆதரவு வழங்கினார்கள். ஆகவே, வாக்குரிமை தொடர்பில் கருத்துரைக்க இவர்களுக்கு தார்மீக உரிமை கிடையாது என சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் எம். பி. தெரிவித்துள்ளார்.

அவரின் கட்சி பணிமனையில் நேற்று நடத்திய செய்தியார் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும், சர்வஜன வாக்குரிமை தொடர்பாக ஐக்கிய மக்கள் சக்தியினர் கடந்த வாரம் பாராளு மன்றத்தில் விசேட உரையாற்றினார்கள். மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திஸநாயக்க ஜனநாயகம், வாக்குரிமை தொடர்பில் நீண்ட உரையாற்றினார்.

தேர்தலில் தோல்வியடைவோம் என்று அறிந்தும் 15

# அத்தியாவசிய மருந்துகளின் விலைகள் விரைவில் குறையும்

## சுகாதார அமைச்சர் அறிவிப்பு



கொழும்பு, மார்ச் 14

அத்தியாவசிய மருந்து பொருட்களின் விலைகளை குறைக்க எதிர்பார்த்துள்ளோம் என்று சுகாதாரத் துறை அமைச்சர் கெஹலிய ரம்புக் வெல தெரிவித்தார்.

நேற்று அவரின் அமைச்சில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மருந்துத் தட்டுப்பாடு தொடர்பில் வெளியாகியுள்ள செய்திகள் அடிப்படையற்றவை.

நாட்டின் பிரதான நிலை ஊடகங் கள் சுகாதாரத்துறை தொடர்பில் பொய்யான செய்திகளை வெளியிடடுள்ளமை கவலைக்குரியது.

மருந்து தட்டுப்பாட்டுக்கு தீர்வு காண்பதற்கு சர்வதேச நிதி நிறுவனம் ஒன்று 15

# சிறுபான்மையினருக்காகவும் போராடாத வரை நாடு விடியாது

## மனோ கணேசன் எம். பி.

கொழும்பு, மார்ச் 14

வடக்கு - கிழக்கு தமிழ், முஸ்லிம் மக்கள், மலையக தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் துன்பங்களை புரிந்துகொண்டு - பொதுப் போராட்டத்தில் இணைத்துகொள்ள சிங்கள அரசியல் கட்சிகள், சிங்கள மாணவர் இளைஞர் அமைப்புகள் தயாராகாத வரை இந்த நாடு விடிவு பெறாது என்று தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

“பயங்கரவாத தடை சட்டம் என்பதே தமிழருக்கு எதிராக 1979 இல் உருவாகிய சட்டமாகும். 15

# யாழ். மாநகர முதல்வர் தெரிவுக்கு எமது ஆதரவை சிறீதரன் கேட்டார்!

## இது முறையற்றது என்கிறது ஈ. பி. டி. பி.

யாழ்ப்பாணம், மார்ச் 14

யாழ். மாநகரின் முதல்வர் தெரிவு இழுபறி நிலையில் செல்வதற்கு தமிழரசு கட்சியின் அசமந்தப் போக்கு அல்லது அக்கறையின்மையே காரணம். மாநகரின் மீது அவர்களுக்கு அக்கறை இருந்திருந்தால் எமது கட்சியுடன் அதிகார மட்டத்திலுள்ள சுமந்திரனோ அல்லது அந்தக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவோ, அக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் சீ. வீ. கே. சிவஞானமோ பேசியிருக்க வேண்டும்.

ஆனால் எமது கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவின் பிரத்தியேக ஆலோசகருடன் தமது தெரிவான ஒருவரின் பெயரை கூறி ஆதரிக்குமாறு அந்தக் கட்சியின் 15

# ‘நாளை ஆசிரியர்கள் பணிப்புறக்கணிப்பு’

கொழும்பு, மார்ச் 14

நாட்டில் உள்ள அனைத்துப் பாடசாலைகளும் நாளை புதன் கிழமை நடைபெறாது என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

அனைத்து பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், அறநெறி 15

# உள்ளூராட்சி தேர்தலுக்காக எரிபொருள் வழங்கமுடியாது!

## எரிசக்தி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 14

தேர்தல் நடவடிக்கைகளுக்காக தேர்தல் ஆணைக்குழுவுக்கும் வேட்பாளர்களுக்கும் எரிபொருளை விநியோகிக்க முடியாது. மேலதிகமாக எரிபொருளை இறக்குமதி செய்வதற்கான நிதியை திரட்டி எரிபொருளை இறக்குமதி செய்ய குறைந்தது மூன்று அல்லது ஆறு மாதங்களேனும் செல்லும். ஆகவே விரைவாக எரிபொருள் விநியோகிக்க முடியாது என தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிவித்துள்ளோம் என்று 15

# யாழில் குற்ற செயல்களுடன் தொடர்புடைய ஐவர் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 14

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பல்வேறு வன்முறை சம்பவங்களுடன் தொடர்புடைய 5 சந்தேகநபர்கள் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடமிருந்து இரண்டு வாள்கள் மற்றும் களவாடப்பட்ட 3 மூன்று மோட்டார் சைக்கிள்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன என்று யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்தஆண்டு, ஒக்ரோபர் மாதம் காரைநகர் பகுதியிலுள்ள வீடொன்றில் இரண்டு மோட்டார் சைக்கிள்களில் சென்ற 6 பேர் கொண்ட கும்பல் 15

# தபால் மூல வாக்களிப்பு மீண்டும் பிற்போகலாம்!

## தேர்தல் ஆணைக்குழு தலைவர்

கொழும்பு, மார்ச் 14

நாளை புதன்கிழமைக்குள் திறைசேரி 50 கோடி ரூபாயை வழங்காவிட்டால் தபால்மூல வாக்களிப்புக்கான புதிய திகதிகளை அறிவிக்க நேரிடும் என்று தேர்தல் ஆணைக் குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஏப்ரல் 25ஆம் திகதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. முன்னதாக, தபால்மூல வாக்களிப்பு எதிர்வரும் 28 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதிவரை நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டது. 15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# இப்படியும் நடக்கிறது...!

தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா அண்மையில் ஓர் அறிவிப்பை விடுத்திருந்தமை வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

எதிர்வரும் பத்தொன்பதாம் திகதி நடைபெறவிருக்கும் தமிழரசு கட்சியின் மத்திய செயல்குழுக் கூட்டத்தில் ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் இணைந்து பணியாற்றுவது தொடர்பாக தான் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வரவிருப்பதாக அவர் தெரிவித்திருந்தார். அது தொடர்பாக 'ஈழநாடு' ஆசிரியர் தலையங்கமும் எழுதியிருந்தது.

அதில், 'கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா முதலில் தனது கட்சியை சரிப்படுத்த வேண்டும்', என்று அதற்கு தலைப்பும் கொடுத்திருந்தார் ஆசிரியர்.

அதனைப் படித்து விட்டு பல வாசகர்கள் தத்தமது கருத்தை தெரிவித்து வருகின்றனர். ஒரு வாசகர் 'பூனைக்கு மணி கட்டுவது யார் என்று பார்த்திருந்தேன். சரியான நேரத்தில் - சரியான மணி. பார்ப்போம் இன்னும் கொஞ்ச நாளைக்கு' என்று அந்த வாசகர் அதுபற்றி எழுதியிருந்தார்.

இன்னுமொருவர் கொஞ்சம் வித்தியாசமாக தனது குரலிலேயே பதிவுசெய்து ஒரு கருத்தை சமூக வலைத்தளங்களில் வெளியிட்டிருக்கிறார். 'ஈழநாடு' ஆசிரியருக்கு அனுப்பிவிடுங்கள் என்று கேட்டு அவர் சமூக வலைத்தளங்களில் வெளியிட்டிருக்கிறார். 'ஈழநாடு' வுக்கு நேரடியாக அனுப்பியிருக்கலாம். ஆனால், ஏனோ தெரியவில்லை, அவர் அப்படி அனுப்பவில்லை. அதனை நண்பர் ஒருவர் அனுப்பியிருந்தார்.

அவரைப் பொறுத்தவரை 'ஈழநாடு'வுக்கு தமிழரசில் என்ன நடக்கின்றது என்பது ஒன்றுமே தெரியாது என்ற நினைப்பு. தமிழரசுக் கட்சியில் மாவை தொங்கிக் கொண்டிருக்கிறாரே தவிர, கட்சி இப்போது சுமந்திரனின் பூரண கட்டுப்பாட்டில் இருக்கின்றது என்பது அவரின் கருத்து.

அது ஈழநாடு ஆசிரியருக்கு தெரியாது என்ற அவரது நினைப்பு அவரது தனிப்பட்ட கருத்து. கட்சி யாருடைய கட்டுப்பாட்டில் இருந்தாலும் கட்சிக்கு உத்தியோக பூர்வ தலைவர் இன்னும் மாவையே. அதனால்தான் அடுத்த மத்திய குழுக்கூட்டத்தில் கொண்டுவரவிருக்கும் தீர்மானம் குறித்து அவர் அறிவிப்பு வெளியிடுகின்றார். அது கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்படுமா என்பது வேறு சங்கதி. ஆனால், அவர் தலைவர் என்பதால் மாத்திரமல்ல, அவர் மத்திய குழுவுக்கு ஒரு சாதாரண உறுப்பினராக இருந்தாலும் தீர்மானம் கொண்டுவரும் உரிமை அவருக்கு இருக்கும்.

எனவே, இப்படியோர் அறிவிப்பை விடுக்கின்றபோது நீங்கள் உண்மையாகவே தலைவராக இருந்தால், முதலில் கட்சியை ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் இணைந்து பயணிப்பதற்கு ஏற்றவகையில் மாற்றுங்கள் என்று கேட்பதற்கும், கட்சி யாருடைய கட்டுப்பாட்டில் இருக்கின்றது என்பதற்கும் எந்த சம்பந்தமும் இருப்பதாகத் தெரியவில்லை.

அந்த வாசகரின் செய்தியில் கடந்த தேர்தலில் மாவை, சரவணபவன், சிறீதரனுக்கு வேட்பாளராக இடம்கொடுப்பதில்லை என்று சுமந்திரன் முடிவெடுத்தார் என்றும் சம்பந்தன் தலையிட்டு நியமனம் கொடுக்கப்பட்டதாகவும் தெரிவித்திருக்கிறார். அவர்கள் தோற்ற பின்னர், தான் சொன்னது சரி என்று சுமந்திரன் வாதிட்டதாகவும் வேறு ஏதோ தனக்கு தெரிந்ததுதான் உண்மை என்ற பாணியில் அவர் கருத்து தெரிவித்திருக்கிறார். யாழ். தேர்தல் மாவட்டத்தில் சிறீதரனே அதிகூடிய விருப்பு வாக்குகளுடன் தெரிவானவர் என்பதும் தான் வெற்றி பெறுவதற்காகவும் சுமந்திரன், சிறீதரனின் தயவை நாடியது பற்றிம் அவர் அறிந்திருக்கவில்லையோ தெரியவில்லை.

தேர்தலில் யார் தோற்றவர்கள், யார் வென்றவர்கள் என்பதும் இரகசியமானதில்லையே.

அந்த நேயர் இன்னுமொரு தகவலையும் சொல்லியிருக்கிறார். அடுத்த தேர்தலில் தனக்கு சேர் போடக்கூடியவர்களை மாத்திரமே வெல்ல வைப்பதற்கான முயற்சியிலேயே சுமந்திரன் ஈடுபட்டிருப்பதாகவும் சாணக்கியா போன்ற இளையவர்களுடனேயே அடுத்த பாராளுமன்றத்திற்கு செல்வதே சுமந்திரனின் திட்டம் என்கிறார் அவர்.

எவருக்கும் தாம் விரும்பியதை நினைக்கி ன்ற உரிமை இருக்கின்றது. யார் என்ன நினைத்தாலும் அதுபற்றி தமிழ் மக்களே தீர்மானிப்பார்கள். அவை பற்றியெல்லாம் அடுத்த பாராளுமன்ற தேர்தல் காலத்தில் பேசுவோம்.

ஆனாலும் அந்த வாகரின் கடைசி வரிகள் கவனத்திற்குரியவை.

'தமிழரசு கட்சி ஒரு தேநீர் கடை மாதிரி. அதன் முதலாளி இப்போது சுமந்திரன். மற்றவர்கள் எல்லாம் தேநீர் போடுபவர், தேநீர் பரிமாறுபவர், காசு கலைப்பவர்கள், அங்கு வேலை செய்பவர்கள்தான்', இதுவே அந்த வாசகரின் கடைசி வரிகள்.

ஒரு திறமையான சட்டத்தரணி நீதிமன்றங்களில் தனது திறமையான வாதங்களால் தனது கட்சிக்காரருக்கு வெற்றியைப் பெற்றுத்தரலாம். அதற்காக அந்தத் திறமையான சட்டத்தரணியால் ஒரு சட்ட நிறுவனத்தை திறமையாக நிர்வகிக்க முடியும் என்பதல்ல. சட்டத்திறமை என்பது வேறு, நிர்வாக திறமை என்பது வேறு.

ஒரு கட்சியை நிர்வகிப்பதும் ஒரு சட்டநிறுவனத்தை நிர்வகிப்பதும் வேறுவேறு அல்ல.

அரசியலுக்கு வந்த புதிதில் ஒருவர் இந்த ஊர்க்குருவிக்கு சொன்னது இப்போதும் நினைவிருக்கின்றது.

'எனக்கு நிர்வாக விடயங்களில் தலையிடுவது அறவே பிடிக்காது. அது எனக்கு தெரியாத ஒன்று என்றுகூட சொல்லலாம். அதனால்தான் நான் சட்டநிறுவனத்தைக் கூடத்தொடங்கவில்லை'.

ஆனால், அரசியல் என்பது ஒரு போதை மாதிரி, போதை ஏற ஏற எடுத்துக்கொண்டே இருக்கச் சொல்லும். அரசியலில் பதவி வர வர இன்னும் தேவை என்றே தோன்றும்.

இதுவே தமிழரசிலும் நடந்து கொண்டிருக்கின்றது.

**- ஊர்க்குருவி**

# ஆணைக்குழுக்கள் அரசியல் நோக்குடன் செயலாற்றுகின்றன

கொழும்பு, மார்ச் 14

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு ஆகியன அரசியல் நோக்கத்துடன் செயல்படுகின்றன.

நாட்டு மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் தொழில்சங்க போராட்டத்தை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஏன் மனித உரிமைகள் மீறலாக கருதவில்லை என மின்சாரத்துறை மற்றும் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜயசேகர கேள்வி எழுப்பினார்.

எமது அரசாங்கம் வழங்கிய ஒரு சில நியமனங்கள் இன்று அரசாங்கத்துக்கு எதிராக காணப்படுகிறது. விசேடமாக இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவரை குறிப்பிட வேண்டும். இவர் அரசியல் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு செயல்படுகிறார்.

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் முறையாக செயல்பட்டிருந்தால் கடந்த ஆண்டின் இறுதியில் நாட்டில் மின் விநியோக கட்டமைப்பில் பாதிப்பு ஏற்பட்டிருக்காது. பிரச்னைகளை தீவிரப்படுத்தி ஆணைக்குழுவுக்கும் அமைச்சுக்கும் இடையில் பிரச்னைகளை தோற்றுவித்தார். எதிர்காலத்தில் இவர் ஏதாவதோர் அரசியல் கட்சியின் உறுப்பினராக பதவி வகிப்பார்.

மறுபுறம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவும் அரசியல் நோக்கத்துடன் செயல்படுகிறது. உயர்தர பரீட்சை இடம்பெறும் காலத்தில் மின் விநியோகம் துண்டிக்கப்பட்ட போது அதனை மனித உரிமைகள் மீறலாக கருது பேச்சை மேற்கொண்ட மனித உரிமைகள் ஆணைக் குழு தற்போது அமைதியாக இருப்பது வேடிக்கையாக உள்ளது.

விடைத்தாள் திருத்தும் பணிகளில் இருந்து விலகுவதாக குறிப்பிட்டுக் கொண்டு இலங்கை ஆசிரியர் சங்கம் முரண்பாடுகளை தோற்றுவித்துள்ளது. இதனை மனித உரிமைகள் ஆணைக்குழு ஏன் மனித உரிமை மீறல் செயல்பாடாக கருதவில்லை. நாட்டு மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் தொழில்சங்க போராட்டத்தை மனித உரிமைகள் ஆணைக்குழு ஏன் மனித உரிமைகள் மீறலாக கருதவில்லை - என்றார். (ஐ)

# லண்டன் கனகதுர்க்கை ஆலயத்தில் தியான மண்டபம் திறந்து வைப்பு!





லண்டன், மார்ச் 14

லண்டன் - ஈலிங் ஸ்ரீ கனகதுர்க்கை அம்பாள் ஆலயத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட தியானமண்டபம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

இறைவணக்கத்துடன் சிவாச்சாரியர்கள் மந்திரம் ஒலிக்க வாசுசாந்தி, கணபதி, லக்ஸ்மி, நவக்கிரக, ஹோம வழிபாட்டுடன் தியான மண்டப திறப்பு விழா நடைபெற்றது.

கனகதுர்க்கை அம்மன் ஆலயத்தின் இணை ஸ்தாபகரும், அறங்காவலரும், கட்டட இணை ஒருங்கிணைப்பாளருமான அப்பையா தேவசகாயம் கட்டட ஒப்பந்தகாரரிடமிருந்து திறப்பு கோர்வையை பெற்று, அவற்றை கனகதுர்க்கை அம்மன் நிர்வாக சபை தலைவர் யோகநாதனிடமும் பொருளாளர் சபாபதி ரகுநாதனிடமும் கையளித்தார்.

வயது மூத்தோர்கள் ஆலய வழிபாட்டுடன் இளைப்பாறி செல்லவும் இளம் சந்ததியினருக்கு சைவ சமய, தமிழ் வகுப்புகள், மற்றும் பலரும் பயன் பெறும் வகையில் தியான, யோகாசன பயிற்சி வகுப்புகள், ஆன்மீக உரைகள், ஆன்மீக புத்தகங்கள் கொண்ட நூல்நிலையம் இவை அனைத்தையும் உள்ளடக்கிய சேவையை வழங்கும் நல் நோக்கில் குறித்த மண்டபம் திறந்துவைக்கப்படுள்ளது.

# 105 வயது பாட்டியின் மண்டையோட்டை தோண்டி எடுத்த இளைஞர்கள் கைது!

கொழும்பு, மார்ச் 14

பதுளை - உதாகம பொது மயானத்தில் புதைக்கப்பட்டிருந்த பெண் ஒருவரின் சடலத்தை தோண்டி அதன் மணடையோட்டை எடுத்து ஒளிப்படம் எடுத்து சமூக வலைத்தளங்களில் வெளியிட்டார்கள் எனக் கூறப்படும் மூன்று இளைஞர்களைக் கைது செய்துள்ளதாக மஹவ தலைமையக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டின் பிரகாரம், 18, 19 மற்றும் 20 வயதுடைய மூன்று இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் உதாகம மற்றும் மஹவ பிரதேசத்தை சேர்ந்தவர்கள்.

மெனிக்கின்ன பிரதேசத்தில் நபரொருவரின் தேவைக்காக ஆசிரியர் ஒருவர் மண்டையோட்டை கேட்டதாகவும் இதன் படியே தாம் கல்லறையை தோண்டி மண்டையோட்டை எடுத்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

105 வயது மூதாட்டியின் மண்டையோடே இவ்வாறு எடுக்கப்பட்டிருந்தது.

இறந்தவரின் உறவினர்கள் அளித்த முறைப்பாட்டின் அடிப்படையிலேயே இந்த இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். (ஐ)

# கசிப்பு கொண்டு சென்ற பெரமுன வேட்பாளர் கைது!

கொழும்பு, மார்ச் 14

இம்முறை உள்ளூராட்சி மன்ற தேர்தலில் சிறீலங்கா பொதுஜன பெரமுன சார்பில் சிலாபம் உள்ளூராட்சி சபைக்கு போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் மாதம்பை பிரதேசத்தைச் சேர்ந்த 25 வயதுடையவர். உடலவெல பிரதேசத்தில் வீதி தடையில் அவர் பயணித்த சிறிய லொறியை பொலிஸார் சோதனையிட்டபோதே கசிப்பு கைப்பற்றப்பட்டதுடன் அவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கல்முறுவ பிரதேசத்தில் உள்ள ஒருவருக்கு விற்பனை செய்வதற்காக லொறியில் மாதம்பையிலிருந்து இந்தக் காசிப்பு போத்தல்களை கொண்டு சென்று கொண்டிருந்தபோதே அவரிடமிருந்து கசிப்பு கைப்பற்றப்பட்டது.

(ஐ)

ஈழநாடு
Eelanadu
14.03.2023 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், மாசி 30

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம் உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# பாரம்பரிய கட்சிகளின் வீழ்ச்சி

தென்னிலங்கை அரசியலில் பாரம்பரிய கட்சிகள் முற்றிலுமாக வீழ்ச்சியடைந்திருக்கின்றன. 2018 உள்ளூராட்சி தேர்தலில், ராஜபக்ஷக்களின் சிறீலங்கா பொதுஜன பெரமுன ஆளும் தரப்பை தோற்கடித்ததைத் தொடர்ந்து, அதுவரையில் சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவு தளம் அனைத்தையும் பொதுஜன பெரமுன ஆக்கிரமித்துக் கொண்டது. சிங்கள மக்கள் பண்டாரநாயக்கா வழிவந்த பாரம்பரிய கட்சியை தூக்கியெறிந்தனர்.

2020 பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வரலாற்று தோல்வியை சந்தித்தது. ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவுத்தளம் முழுவதும் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்திக்கு இடம் மாறியது. அதுவரையில் யானை சின்னத்துக்கு பின்னாலிருந்த சிங்கள மக்கள் தொலைபேசி சின்னத்துக்கு மாறுவதற்கு பின்நிற்கவில்லை.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால் இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்து இலங்கையை மாறிமாறி ஆட்சிசெய்த இரண்டு பிரதான பாரம்பரிய கட்சிகளின் அடையாளங்களும் மக்கள் மத்தியில் சிதைந்து போயிருக்கின்றன. அதிலிருந்து வெளியேறுவதற்கு சிங்கள மக்கள் பின்நிற்கவில்லை.

பொருளாதார நெருக்கடியின் விளைவாக எதிர்பாராதவிதமாக ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியானாலும்கூட, அவரால் ஐக்கிய தேசியக் கட்சிக்கு முன்னரைப் போன்று சக்தியூட்ட முடியுமா – என்பது, கேள்விக்குறியாகவே இருக்கின்றது. அதேபோன்று மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் இயங்கிவரும், சிறீ லங்கா சுதந்திர கட்சியின் எதிர்காலமும் முடிவை நோக்கியே செல்கின்றது. பெருமளவுக்கு முடிந்துவிட்டது.

பொருளாதார நெருக்கடியை தொடர்ந்து, ராஜபக்ஷக்களின் பொதுஜன பெரமுனவும் வீழ்ச்சியையே எதிர்கொண்டிருக்கின்றது. இவ்வாறானதொரு பின்னணியில்தான் ஐக்கிய தேசியக் கட்சியும் பொதுஜன பெரமுனவும் இணைந்து செயல்படுவதற்கான முயற்சிகள் தெரிகின்றன. ரணில் விக்கிரமசிங்கவை பொது வேட்டபாளராக நிறுத்துவதற்கான நகர்வுகளும் முன்னெடுக்கப்படுகின்றன. இவ்வாறான முயற்சிகளின் விளைவாக உருவாகும் கூட்டணியும் பாரம்பரிய சாயல் கொண்டதாக இருக்கப் போவதில்லை. புதிய அரசியல் சூழலை எதிர்கொள்ள முடியாமல் போகின்றபோது, பாரம்பரிய கட்சிகள் வீழ்ச்சியடைவது தவிர்க்க முடியாதது.

மறுபுறம் மாற்றத்தை விரும்பும் சிங்கள மக்கள் ஜே. வி. பியின் புதிய முகமான தேசிய மக்கள் சக்தியின் பின்னால் அணிதிரளக் கூடிய வாய்ப்பிருப்பதாகவும் கணிப்புக்கள் கூறுகின்றன. ஏனெனில், மக்கள் மாற்றங்களை எதிர்பார்க்கின்றனர்.

தமிழ்த் தேசிய அரசியலை நோக்கினாலும் இங்கும் அவ்வாறான சூழலே காணப்படுகின்றது. பிரதான தமிழ்த் தேசிய கட்சிகள் அனைத்தும் 2004ஆம் ஆண்டியிலிருந்து தமிழரசு கட்சியின் சின்னத்தின் கீழ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக ஒன்றுபட்டிருந்தனர். அந்த அரசியலில் பெரிய உடைவு ஏற்பட்டிருக்கின்றது. 2020 தேர்தலில் கூட்டமைப்பு ஒப்பீட்டடிப்படையில் பின்னடைவுகளை சந்தித்திருந்தது. தமிழரசு கட்சிக்கும் கூட்டமைப்பின் ஏனைய பங்காளிக் கட்சிகளுக்கும் இடையிலுமான உள்முரண்பாடுகள் அதிகளவில் மக்கள் மத்தியில் அம்பலமானது கூட்டமைப்பின் மீது அவநம்பிக்கையை ஏற்படுத்தியது.

இது தவிர, 2015 – ஆட்சி மாற்றத்தை சரியாகப் பயன்படுத்துவதில் சம்பந்தன் – சுமந்திரன் தரப்பின் தவறுகள் மற்றும் தமிழரசு கட்சியின் உள்முரண்பாடுகள் வீதிக்கு வந்தமை போன்ற காரணங்களால் – கூட்டமைப்பு பெரும் பின்னடைவை சந்தித்திருந்தது. தற்போது தமிழரசு கட்சி கூட்டமைப்பிலிருந்து பிரிந்து சென்றிருக்கின்ற நிலையில் குத்துவிளக்கு சின்னத்தின் கீழ், தமிழ் தேசியக் கூட்டமைப்பு புதிய வடிவத்தைப் பெற்றிருக்கின்றது. தென்னிலங்கையில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்களை போன்று, வடக்கு – கிழக்குச் சூழலிலும் பாரம்பரியமான கட்சிகளுக்கு எதிராக தமிழ் மக்கள் திரும்புவார்களா?

# மாடுகளை கடத்திய இருவர் யாழில் கைது!



*யாழ்ப்பாணம், மார்ச் 14*

அச்சுவேலியிலிருந்து கடத்திவரப்பட்ட 3 மாடுகள் யாழ். மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவினால் மீட்கப்பட்ள்ளன. அத்துடன், சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் வாழ்வாதாரத்திற்காக வளர்க்கப்படும் மாடுகள் திருடப்படும் சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன.

இந்த நிலையில், பலாலியில் 3 மாடுகளை களவாடி சென்ற மூவர் கைது செய்யப்பட்டனர். இந்த நிலையில், அச்சுவேலியிலிருந்து எந்த அனுமதியும் பெறாமல் கடத்தி வரப்பட்ட 3 மாடுகளை பொலிஸார் மீட்டுள்ளனர். அத்துடன், இருவரை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் அச்சுவேலி கிழக்கை சேர்ந்தவர்கள் என்றும் அவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# க. பொ. த. சாதாரண தர பரீட்சையை திட்டமிட்டபடி நடத்துவதில் நெருக்கடி!

## கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த

*கொழும்பு, மார்ச் 14*

பேராசிரியர்கள், ஆசிரியர்கள், தொழில்சங்கங்கள் இணைந்து முன்னெடுத்துள்ள வேலைநிறுத்தத்தால் உயர்தர பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிகள் தாமதமடைந்துள்ளன. இதனால் பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுவதிலும் தாமதம் ஏற்படும். அத்துடன், சாதாரண தர பரீட்சைகளை திட்டமிட்ட தினத்தில் நடத்துவதிலுமம் நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த தெரிவித்தார்.

கொழும்பு - மட்டக்குளி புனித ஜோன் மகா வித்தியாலயத்தில் நேற்று நிகழ்வு ஒன்றில் பங்கேற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கல்வி பொதுத் தராதர உயர்தர பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் இரு வாரங்கள் கால தாமதமடைந்துள்ளன. இது தொடர்பில் பல்கலைக்கழக பேராசிரியர்கள் சங்கத்துடன் பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதில், அவர்களால் முன்வைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளில் பிரதானமானது வரி தொடர்பானதாகும்.

இது தொடர்பில் நாம் நிதி அமைச்சுக்கு அறிவித்திருக் கின்றோம். அவர்களின் ஏனைய நிபந்தனைகள் தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளின்போது வழங்கப்படும் கொடுப்பனவை இரு மடங்காக அதிகரித்து, அதற்கான அமைச்சரவை அனுமதி பெறப்பட்டுள்ளதோடு, உரிய தரப்பினருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பணிகளில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகளை அதிகரிப்பது தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. மாணவர்களின் எதிர்காலம் கருதி பேராசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் விடைத்தாள் மதிப்பீட்டு பணிகளை விரைவில் ஆரம்பிக்கக்கூடும் என்று எதிர்பார்க்கின்றோம்.

உயர்தர விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் கால தாமதமடைந்துள்ளமையால், பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுவதிலும் கால தாமதம் ஏற்படும். இதன் காரணமாக குறிப்பிட்ட காலத்துக்கு சாதாரண பரீட்சைகளும் தாமதமடையும். பல்வேறு தரப்பினராலும் முன்னெடுக்கப்பட்டுள்ள தொழிற்சங்க நடவடிக்கைகள் காரணமாக மக்களின் உரிமை மீறப்படுகிறது. இது தொடர்பில் எவரும் கருத்துகளை வெளியிடுவதில்லை - என்றும் கூறினார். (ஐ)

# அத்தியாவசிய சேவையாக அஞ்சல் சேவை பிரகடனம்!

*கொழும்பு, மார்ச் 14*

அஞ்சல் சேவையை அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்தி ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய அதி விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

1979ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவுக்கமைய ஜனாதிபதிக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், இந்த பிரகடனம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



மார்ச் - 14 சனிக்கிழமை
சுபகிருது வருடம் - மாசி 30
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 03.00 - 04.30
திதி : சப்தமி




**மேடம்**
நீங்கள் ஈடுபடும் செயல்களில் இழுபறியான நிலை உண்டாகும். மனதில் குழப்பம் அதிகரிக்கும். புதிய முயற்சி வேண்டாம். எதிர்பார்ப்பில் எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டிய நாள்.

**இடபம்**
உங்கள் எதிர்பார்ப்பு எளிதாக நிறைவேறும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். விரும்பிய வகையில் செயல்பட்டு மகிழ்வீர். நண்பர்கள் வழியே நன்மை அதிகரிக்கும். பிரச்னைகள் விலகும்.

**மிதுனம்**
மறைமுக எதிரி விலகிச் செல்வர்வியாபாரத்தில் வேலை ஆட்களை மாற்றுவீர். வருமானத்தில் இருந்த தடை அகலும். உங்களை மாற்றிக் கொள்வீர்கள். புதிய முயற்சி ஒன்று லாபமாகும்.

**கடகம்**
குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்னை தீரும். சொத்து வாங்கும் முயற்சி நிறைவேறும். புதிய முயற்சி அனுகூலமாகும். விலகிச்சென்ற உறவு உங்களைத்தேடி வரும். ஆடம்பர செலவு செய்து மகிழ்வீர்.

**சிம்மம்**
உங்களுக்கு விருப்பமான ஒருவரை இன்று சந்திப்பீர்கள். நினைத்ததை சாதிப்பீர். வியாபாரத்தின் நுணுக்கங்களை தெரிந்து கொண்டு செயல்படுவீர்கள். ஆதாயம் அதிகரிக்கும்.

**கன்னி**
சொத்துப் பிரச்னை உங்களுக்கு சாதகமாகும். நீங்கள் ஈடுபடும் செயல் லாபமாகும். உங்கள் சுய ஆற்றல் வெளிப்படும். துணிச்சலாக செயல்பட்டு ஒரு முயற்சியில் வெற்றி காண்பீர்கள்.

**துலாம்**
நேற்று இருந்த சங்கடம் விலகும். எதிர்பார்த்த வரவு வந்து சேரும். கணவன் மனைவிக்குள் ஏற்பட்ட பிரச்னை விலகும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். எதிர்பார்த்த உதவி வரும்.

**விருட்சிகம்**
மனதில் தேவையற்ற சிந்தனை உண்டாகும். உங்கள் எதிர்பார்ப்பு இழுபறியாகும். அதற்கு பதில் சொல்ல வேண்டாம். குடும்பத்தின் நலனில் அக்கறை அதிகரிக்கும். உங்கள் விருப்பம் நிறைவேறும்.

**தனுசு**
வெளியூர் பயணம் மேற்கொள்வீர். அலைச்சல் அதிகரிக்கும் உங்கள் எதிர்பார்ப்பு தாமதமாகும். எதிர்கால நலனை ஒட்டி ஒரு முயற்சி மேற்கொள்வீர். விரயம் அதிகரிக்கும். விருப்பம் பூர்த்தியாகும்.

**மகரம்**
நீண்ட நாட்களாக சந்திக்க நினைத்த ஒருவரை இன்று சந்திப்பீர்கள். புதிய பொறுப்பு உங்களுக்கு வரும். வியாபாரத்தை விருத்தி செய்ய முயற்சி மேற்கொள்வீர். வருமானம் அதிகரிக்கும்.

**கும்பம்**
பொது நலனில் கவனம் செல்லும். அரசியல்வாதிகளின் செல்வாக்கு அதிகரிக்கும். கூட்டு வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். உங் களை மாற்றிக் கொள்வீர். வீடு வாகனத்தை சரி செய்வீர்கள்.

**மீனம்**
நேற்று இருந்த நெருக்கடி விலகும். மனதில் நிம்மதி உண்டாகும். பணியிடத்தில் ஏற்பட்ட சங்கடம் அகலும். உங்கள் எண்ணம் ஒன்று நிறைவேறும். திட்டமிட்டிருந்த வேலையை செய்து முடிப்பீர்கள்.

# எச் 1 என் 1 பாதிப்பு தமிழகம் முதலிடம்

*சென்னை, மார்ச் 14*

இந்தியாவில் கடந்த பெப்ரவரி மாதம் வரை இன்புவன்சா எச்1என்1 பாதிப்பு அதிகம் கண்டறியப்பட்ட மாநிலங்களில் தமிழகம் முதலிடத்தில் உள்ளது.

இந்தியா முழுவதும் இன்புளூவன்சா ஏ வகை வைரஸான எச்3என்2 தொற்று பரவத் தொடங்கியுள்ளது. சுமார் 100 பேருக்கு இந்த புதிய வைரஸ் காய்ச்சல் பாதிப்பு உறுதி செய்யப்பட்ட நிலையில், ஏராளமானோர் காய்ச்சல் பாதிப்புடன் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

15 வயதுக்கு குறைவானவர்களும், 65 வயதுக்கு மேற்பட்டவர்களும் காய்ச்சலால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். நோயாளிகள், இணை நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வைரஸ் பாதிப்பின் தீவிரம் அதிகமாக உள்ளது.

மேலும், நாடு முழுவதும் இன்புளூாவன்சா எச் 1என் 1 பாதிப்பு அதிகம் கண்டறியப்பட்ட மாநிலங்களில் தமிழகம் முதலிடத்தில் உள்ளது. பெப்ரவரி 28ஆம் திகதி வரை நாடு முழுவதும் எச்1என்1 தொற்றால் 955 பேர் பாதிக்கபட்டுள்ளனர். இதில், தமிழகத்தில் 545, மகா ராஷ்டிராவில் 170, குஜராத்தில் 74, கேரளாவில் 42, பஞ்சாப்பில் 28 பேருக்கு இந்த நோய் தொற்று கண்டறியபட்டுள்ளது.

# பழனிசாமி மீது வழக்கு பதிவு அ. தி. மு.கவினர் ஆர்ப்பாட்டம்!

*சென்னை, மார்ச் 14*

அ. தி. மு. க. இடைக்கால பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமிமீது வழக்குப்பதிவு செய்யப் பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து, சென்னை, மதுரை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி உள்ளிட்ட இடங்களில் அந்தக் கட்சியினர் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



சிவகங்கையில் கட்சி நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக அ. தி. மு. க. இடைக்கால பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி கடந்த சனிக்கிழமை அன்று சென்னையில் இருந்து விமானம் மூலம் மதுரை சென்றுள்ளார். அப்போது எடப்பாடி பழனிசாமி மதுரை விமானநிலையத்தில் இறங்கி, பேருந்தில் பயணித்த போது அமமுகவை சேர்ந்த ராஜேஸ்வரன் என்பவர் எடப்பாடி பழனிசாமி பற்றி அவதூறாக பேசி முகநூல் பக்கத்தில் நேரலை காணொலி ஒன்றை பதிவிட்டுள்ளார்.

அந்த நேரலை காணொலி பதிவை எடுத்து கொண்டிருக்கும்போதே, பழனிசாமியின் பாதுகாவலர் கைபேசியை வாங்கி நேரலையை தடுத்துள்ளார். பிறகு விமான நிலையத்தை விட்டு வெளியே வந்த ராஜேஸ்வரனை அ. தி. மு. கவினர் தாக்கினர் என்று கூறப்படுகிறது. இது குறித்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட் டது. இதையடுத்து, பழனிசாமி மீது வழக்கு தாக் கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில், எடப்பாடி பழனிசாமி மீது வழக்கு பதிவு செய்ததற்கு எதிர்ப்பு தெரிவித்தே நேற்று பல இடங்களிலும் எதிர்ப்பு போராட்டம் நடைபெற்றது. (ஐ)

# இலத்தீன் அமெரிக்க நாடுகளுக்கு இணையாக தமிழகம் மாறுகிறது

## அண்ணாமலை குற்றச்சாட்டு

*சென்னை, மார்ச் 14*

தி. மு. கவினர் தமிழகத்தை உலகின் அதிகம் குற்றம் நடக்கும் இலத்தீன் அமெரிக்க நாடுகள் போன்று மாற்றிக் கொண்டிருக்கின்றனர் என்று தமிழக பா. ஜ. க. தலைவர் அண்ணாமலை கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள ருவிற்றர் பதிவில் கூறியிருப்பதாவது:-

“தி. மு. கவினர் கட்டப்பஞ்சாயத்து செய்வதை தங்களது முழு நேர தொழிலாக கொண்டுள்ளார்களா என்ற எண்ணம் மக்கள் மத்தியில் எழுந்திருக்கிறது.

தி. மு. க. அரசியல்வாதி ஒருவரின் வெறியாட்டம் கொலையில் முடிந்துள்ளது. தங்கள் கட்சியினர், தமிழகத்தை உலகின் அதிகம் குற்றம் நடக்கும் இலத்தீன் அமெரிக்க நாடுகள் போன்று மாற்றிக் கொண்டிருப்பதை இன்னும் எத்தனை நாள் கண்டும் காணாமல் மௌனமாக இருப்பீர்கள், மு.கஸ்டாலின்?” என்று கூறியுள்ளார்.



# குறவன் - குறத்தி ஆட்டத்துக்கு தடை விதித்தது தமிழக அரசு!

*சென்னை, மார்ச் 14*

திருவிழாக்களில் குறவன், குறத்தி ஆட்டம் நடத்த தடை விதித்து தமிழக அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

தமிழகத்தில் குறவன்- குறத்தி என்ற பெயரில் ஆடல், பாடல் நிகழ்ச்சிகளுக்கு அனுமதி வழங்கக் கூடாது என கடந்த ஜனவரி உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. இது தொடர்பான உத்தரவில், “ஆடல், பாடல் நிகழ்ச்சியில் எந்த ஒரு சமூகமும் குறிப்பாக பழங்குடியின மக்கள் இழிவுபடுத்தப்படும் விதமாக இருக்கக் கூடாது என்பதை உறுதி செய்ய வேண்டும். குறவன் - குறத்தி என்ற பெயரில் ஆடல், பாடல் நிகழ்ச்சிக்கு அனுமதி வழங்கக்கூடாது.

ஆடல் பாடல் நிகழ்ச்சி குறவர் சமூக மக்களை பாதிக்கும் விதமாகவோ, இழிவுபடுத்தும் விதமாகவோ இருந்தால் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழ்நாடு சைபர் கிரைம் காவல் பிரிவில் சிறப்பு பிரிவை ஏற்படுத்தி குறவன்- குறத்தி என்ற பெயரில் ஆபாச நடனங்களை இணையதளத்தில் பதிவேற்றம் செய்வதை தடுக்க வேண்டும் குறிப்பிட்ட சமூகத்தை இழிவுபடுத்தும் விதமாக ஆடல், பாடல் நிகழ்ச்சியை பதிவேற்றம் செய்தவர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்க வேண்டும்.” என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் தமிழகத்தில் திருவிழாக்களில் குறவன், குறத்தி ஆட்டம் நடத்த தடை விதித்து தமிழக அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. (ஐ)

# தேர்தல் நடைபெறுமா என்பது சந்தேகம்தான்!

## கூறுகிறார் பழனி திகாம்பரம்

கொழும்பு, மார்ச் 14

**உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஏப்ரல் 25 ஆம் திகதி நடைபெறும் என தேர்தல் ஆணைக்குழு அறிவித்திருந் தாலும், அன்றைய தினத்தில் தேர்தல் நடைபெறுமா என்பது சந்தேகமே என்று தொழிலாளர் தேசிய சங்கத் தின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.**

தொழிலாளர் தேசிய சங்கம் மற்றும் தொழிலாளர் தேசிய முன்னணியின் மகளிர் தின நிகழ்வு முன்னணியின் தலைவர் பழனி திகாம்பரம் தலைமையில் கட்சி தலைமையகத்தில் நேற்று முன் தினம் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரை யாற்றுகையிலேயே பாராளு மன்ற உறுப்பினர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

உள்ளூராட்சி சபைத் தேர்தல் மார்ச் 9 ஆம் திகதி நடத்தப்படும் என தேர்தல் ஆணைக்குழு ஆரம் பத்தில் அறிவித்தது. அதன்பின் னர் ஏப்ரல் 25 என அறிவிப்பு விடுக்கப்பட்டது. இவ்வாறு பல தடவை அறிவிப்புகள் வெளி வந்தாலும் தேர்தல் நடைபெ றுமா என்பதில் எமக்கு சந்தேகம் தான் உள்ளது.

எவ்வாறாயினும், எதிர்கா லத்தில் என்ன தேர்தல் நடை பெற்றாலும் அதில் ஐக்கிய மக் கள் சக்தி தலைமையிலான கூட் டணியே வெற்றி பெறும்.



இலங்கையில் உள்ள பெண் களில் அதிகளவு துன்பங்களுக்கு உட்படும் பெண்கள் பெருந் தோட்டப் பகுதியிலேயே உள் ளனர்.

எனவே, தமது பெண் பிள் ளைகளுக்கு கல்வி வசதிகளை வழங்கி அவர்களை வேறு தொழில்களில் பெற்றோர் ஈடு படுத்தி வருகின்றனர்-என்றார்.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்:

# பூஜித், ஹேமசிறி விடுவிப்பு; மேன்முறையீடு விசாரணைக்கு

கொழும்பு, மார்ச் 14

ஈஸ்டர் தாக்குதல் வழக்கில் இருந்து பூஜித்ஜயசுந்தர,ஹேமசிறி பெர்னாண்டோ ஆகியோர் விடு விக்கப்பட்டமைக்கு எதிரான மேன்முறையீடு விசாரணைக்கு வரவுள்ளது.

சட்டமா அதிபர் தாக்கல் செய்த குறித்த மேன்முறையீடு மனுமீதான விசாரணையை ஜூலை 4 ஆம் திகதி எடுத்துக் கொள்ள உயர் நீதிமன்ற நீதிபதி கள் தீர்மானித்துள்ளனர்.

பயங்கரவாதத் தாக்குதலைத் தடுக்கத் தவறனரென முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேம சிறி பெர்னாண்டோ ஆகியோர் குற்றச்சாட்டுக்குள்ளாகினர்.

இருப்பினும் இவர்களை விடு தலை செய்வதற்கு மேல் நீதிமன்றம் எடுத்த தீர்மானத் திற்கு எதிராக சட்டமா அதிபர் குறித்த மேன்முறை யீட்டை தாக்கல் செய்தார். (அ)

# தேர்தல்கள் ஆணைக்குழுவின் கூட்டத்தில் நிதியமைச்சு செயலர் பங்கேற்காதது ஏன்?

கொழும்பு, மார்ச் 14

பாதுகாப்புச் சபையின் கூட் டம் காரணமாகவே உள்ராட் சிச் சபை தேர்தல் நிதியொதுக் கம் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழு ஏற்பாடு செய்தி ருந்த கூட்டத்தில் நிதியமைச்சின் செயலாளர் பங்கேற்கவில்லை என்று பாராளுமன்றத்தில் கூறப் பட்ட கூற்றுகளை உயர்மட்ட தரப்புக்கள் மறுத்துள்ளன.

இதன்படி, தேர்தல்கள் ஆணைக்குழுவை சந்திப்பதற் கான வேறொரு திகதியை அறி விக்குமாறு நிதியமைச்சின் செய லாளரினால் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

இந்த நிலையில் திறைசேரி யின் செயலாளரான மஹிந்த சிறிவர்த்தன, கடந்த வாரம் தாம் ஏன் கூட்டத்தில் கலந்து கொள்ள முடியாமல் போனது என்பதற்கான காரணங்களை தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிவித்துள்ளார்.

திட்டமிடப்பட்ட கூட்டத் திற்கு முன்னதாக கடந்த செவ் வாய்க்கிழமை காலை வரை பாதீட்டின் தேர்தல் நிதியை விடுவிக்குமாறு உயர் நீதிமன் றம் வழங்கிய உத்தரவு தமக்கு கிடைக்கவில்லை. உயர் நீதிமன் றத்தின் உத்தரவு கிடைத்ததும் அந்த தீர்மானம் குறித்து சட் டமா அதிபருடன் விவாதிக்க வேண்டியிருந்தது.

கூட்டத்தில் கலந்து கொள்வ தற்கு முன்னர், இது தொடர்பாக பொறுப்பான அமைச்சருடன் கலந்துரையாட வேண்டியிருந் தது.

முன்னதாக திட்டமிடப் பட்ட பாதுகாப்புச் சபைக் கூட் டம் தேர்தல் ஆணைக்குழுவி னால் அழைக்கப்பட்ட கூட்டத் தின் அதே நேரத்தில் நடத்தப்ப டும் என்று தெரிவிக்கப் பட்டி ருந்தது போன்ற காரணங்களை நிதியமைச்சின் செயலாளர் தேர் தல்கள் ஆணைக்குழுவுக்கு அறி வித்திருந்தார். (அ)

# அரச ஊழியருக்கு மேலதிக கொடுப்பனவு வழங்குவது தொடர்பில் அரசு பரிசீலிக்கும்!

கொழும்பு, மார்ச் 14

சர்வதேச நாணய நிதியத்து டன் கலந்தாலோசித்து பொரு ளாதார நிலைமையை மதிப்பிட் டதன் பின்னர் இந்த ஆண்டின் நான்காம் காலாண்டில் அரச ஊழியர்களுக்கு மேலதிக கொடுப்பனவு வழங்குவது குறித்து அரசாங்கம் பரிசீலிக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நிதி இராஜாங்க நிதியமைச் சர் ஷெஹான் சேமசிங்க இத னைத் தெரிவித்துள்ளார்.

ஆறு மாதங்களுக்குப் பிறகு, மறுசீரமைப்புத் திட்டமும் நடைமுறையில் இருப்பதால், பொருளாதாரத்தில் முன்னேற் றம் ஏற்படும் என்று அரசாங்கம் எதிர்பார்க்கிறது, அதன் பின்னரே மதிப்பீடும் மேற்கொள்ளப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், வரிக் கொள்கையில் மாற்றங்கள் இருக் காது என்று அவர் தெரிவித்தார்.

ஏற்கனவே சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்புக் கொள்ளப் பட்ட சீர்திருத்தங்கள் உள்ளன.

அவற்றைத் தாண்டி அரசாங் கத்தினால் செயல்பட முடியாது.

ஒப்பந்தங்களை மீறினால் அது அடுத்த தவணை நிதியுதவி களை பாதிக்கும் என்றும் அமைச் சர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப் பட்ட நிதி வசதிக்கான முதல் தவணையை இந்த மாத இறுதிக் குள் அரசாங்கம் எதிர்பார்க்கிறது என்றும் நிதி இராஜாங்க அமைச் சர் செஹான் சேமசிங்க தெரி வித்தார். (அ)

# மஹிந்தானந்தவை விமான நிலையத்தில் திருப்பி அனுப்பிய அதிகாரி பணி நீக்கம்!

கொழும்பு, மார்ச் 14

வெளிநாட்டுக்கு செல்வதற்கு சென்ற நாடாளு மன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து திருப்பி அனுப்பப்பட்ட சம்பவம் தொடர்பில் அதிகாரி ஒருவர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் கட் டுப்பாட்டாளர் நாயகம் ஹர்ஷ இலுக்பிட்டிய இதனைக் குறிப்பிட்டார்.

அத்துடன் இந்த விடயம் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை பெறப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே வெளிநாடு செல்வதற்காக கடந்த வெள்ளிக்கிழமை கட்டுநாயக்க விமான நிலை யத்துக்கு சென்றிருந்தார்.

இதன்போது குடிவரவு குடியகல்வு திணைக்கள அதிகாரிகள் சிலர் அவருக்கு வெளிநாட்டு பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

எனினும், அவ்வாறான தடை உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை என அவர் குடிவரவு குடி யகல்வு திணைக்கள அதிகாரிகளுக்கு தெரிவித்தி ருந்தார் எனக் கூறப்படுகிறது.

பின்னர் மஹிந்தானந்த அளுத்கமகே மீண்டும் வீட்டுக்கு திரும்பினார் என தெரிவிக்கப்படுகின் றது.

இந்த நிலையில், அவர் நேற்று முன்தினம் வெளி நாட்டுக்கு செல்வதற்கு விமான நிலையத்தில் அனு மதிக்கப்பட்டது.

இயந்திரக் கோளாறு காரணமாக அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டதா என்பது தொடர்பில் அடுத்த வாரம் விசாரணைகள் இடம்பெறும் என குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் கட்டுப் பாட்டாளர் நாயகம் ஹர்ஷ இலுக்பிட்டிய தெரி வித்தார். (அ)

# மோதலின் பின் தப்பிச் சென்றோரின் காரில் தங்க முலாம் பூசிய துப்பாக்கி!

கொழும்பு, மார்ச் 14

ஜா-எல நகர மத்தியில் விபத் துக்குள்ளான கார் ஒன்றை பொலிஸார் சோதனையிட்ட தில் பாகிஸ்தானில் தயாரிக்கப் பட்ட தங்க முலாம் பூசப்பட்ட எம்.பி.5 ரக துப்பாக்கி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மோதல் ஒன்றின்போது காய மடைந்தவர்கள் இருவர் தப்பிச் செல்ல முற்பட்டபோது குறித்த கார் ஜா-எல நகர மத்தியில் விபத்துக்குள்ளானது.

அப்போது, ஜா-எல பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பிரி வின் அதிகாரிகள் சென்று வெட் டுக் காயங்களுடன் வாகனத்தில் இருந்த இருவரை நோயாளர் காவு வாகனத்தில் ஏற்றி மருத்து வமனைக்கு அழைத்துச் சென்ற னர்.

பின்னர் அந்த காரை பொலி ஸார் சோதனை செய்தபோது தங்க முலாம் பூசப்பட்ட துப் பாக்கியை கண்டுபிடித்தனர்.

பொலிஸார் மேற்கொண்ட மேலதிக விசாரணைகளில் ராகம பிரதேசத்தில் சிலர் மது அருந்தி விட்டு கட்டுநாயக்க பிரதேசத் தில் உள்ள இரவு கேளிக்கை விடுதிக்குச் சென்று அங்கிருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்க ளுடன் முரண்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

பின்னர் ராகம பகுதிக்குச் சென்று உரிய துப்பாக்கியை எடுத்துச் சென்று மோதலில் ஈடுபட்ட இரவு கேளிக்கை விடு தியின் பாதுகாப்பு அதிகாரிகளை அச்சுறுத்த முற்பட்டபோது அவர்கள் போத்தல்களால் தாக் கியுள்ளனர்.

பலத்த காயமடைந்த நிலை யில் திரும்பிச் சென்ற நபர்கள் பயணித்த கார் விபத்துக்குள் ளானது.

எவ்வாறாயினும், துப்பாக்கி கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து, பொலிஸாரின் விசார ணையில், அந்த துப்பாக்கி பாகிஸ்தானிலிருந்து ஓய்வு பெற்ற கடற்படை அதிகாரி ஒருவருக்கு பரிசாக வழங்கப் பட்டதாக தெரியவந்துள்ளது.

# மற்றோர் இலங்கை பணிப்பெண் குவைத்தில் அடித்து துன்புறுத்தல்!

கொழும்பு, மார்ச் 14

குவைத்தில் உள்ள இலங்கை வீட்டுப் பணிப்பெண் ஒருவர் உடல் ரீதியாக துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டு, தாக்குதலுக்கு உள்ளானதாக தெரிவிக்கப்பட் டுள்ளது.

குவைத்தில் சுமார் 4 வருடங் களாக வீடொன்றில் வீட்டுப் பணிப் பெண்ணாக இருந்து வந்த பெண் ஒருவரே இவ்வாறு தாக்கப்பட்டுள்ளார்.

அந்த வீட்டின் உரிமையாள ரான பெண் மற்றும் அவரது இரண்டு மகன்களால், உடல் மற்றும் தலையில் தாக்கப்பட் டதால் தான் பலத்த காயங்க ளுக்கு ஆளாகியிருப்பதாக குறித்த பெண் தெரிவித்துள்ளார்.

மாலை 4 மணி முதல் இரவு 10 மணி வரை குடியிருப்பாளர் கள் அந்த பெண்ணை அடித்து துன்புறுத்தியுள்ளதுடன், வாயில் துப்பாக்கியை வைத்து மிரட்டி இதை எந்த வகையி லும் பொலிஸாரிடம் சொல்ல வேண்டாம் என்று கூறியதாக அப்பெண் குறிப்பிட்டுள்ளார்.

பின்னர் வாகனத்தில் ஏற்றிச் சென்று ஓரிடத்தில் தன்னை கைவிட்டுச் சென்றதாகவும் தாக்குதலுக்கு உள்ளான பெண் தெரிவித்துள்ளார்.

பின்னர் அவரது இலங்கை நண்பர்கள் அவரை வைத்தியசா லையில் அனுமதித்துள்ளது டன், இது தொடர்பில் குவைத் பொலிஸாருக்கு அறிவித்துள்ள தாகவும் தெரிவிக்கப்படுகின் றது.

எனினும் இந்த சம்பவம் தொடர்பில் குவைத்தில் உள்ள இலங்கை தூதரகமோ அல்லது வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகமோ எந்த நடவடிக்கை யும் எடுக்கவில்லை என்றும் குறித்த பெண் குற்றம்சாட்டி யுள்ளார். (அ)

# ராஜபக்ஷ-ரணில் அரசுக்கு தேர்தல் என்றாலே அச்சம்!

## சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு



கொழும்பு, மார்ச் 14

**நாட்டை அழித்து, மக்களின் வாழ்வை சீரழித்து மக்களை அழிவின் விளிம்புக்கு இட்டுச் சென்ற முன்னாள் அரசாங்கத்துக்கும், தற்போதைய அரசாங்கத்துக்கும் தேர்தல் என்ற வார்த்தையை கேட்டாலே அச்சம் எழுந்துள்ளதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

மக்களிடம் செல்ல முடியாததாலேயே இந்தநிலை அவர்களுக்கு ஏற்பட்டுள்ளதாகவும், இதன் காரணமாகவே யானை, காகம், மொட்டு தரப்புகள் மூன்றும் தேர்தலை ஒத்திவைக்கும் சதியில் ஈடுபட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- இதுவரை 22 தடவைகளுக்கும் அதிகமாக தேர்தலை சீர்குலைக்க முயற்சி செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், பாராளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகள் மீறப்பட்டதாக இந்த அரசாங்கம் தவறான வாதத்தை உருவாக்கி பிரசாரம் செய்து வருகின்றது.

உயர் நீதிமன்ற நீதிபதிகள், தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்களை சிறப்புரிமைக் குழுவுக்குக் அழைத்து, சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கும் பக்கச்சார்பற்ற நீதித்துறைக்கும் அழுத்தம் கொடுக்கும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தற்போதைய அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது.

திட்டமிடப்பட்ட நிகழ்ச்சி நிரலின் ஒரு பகுதி செயற்படுத்தப்பட்டு வருகிறது. சிறப்புரிமைக் குழுவின் பணிகள் முடியும் வரை இந்த சட்ட நடவடிக்கைகள் அனைத்தும் இரத்து செய்யப்படவேண்டும்.

இந்தநிலையில், வாக்குரிமைக்காக வீதியில் இறங்கி ஜனநாயக உரிமைகளை மீறும் வகையில் செயற்படும் சர்வாதிகார அரசாங்கத்தை தோற்கடிக்க ஒன்றிணைய வேண்டும் -என்றார். (அ)

# தமிழர் ஆசிரியர் சங்கமும் போராட்டத்துக்கு ஆதரவு

கொழும்பு, மார்ச் 14

அடக்குமுறைகளையும் வரிச் சுமைகளையும், விலைவாசி உயர்வுகளையும், கட்டணங்களின் அதிகரிப்புகளையும் எதிர்த்து நாடளாவிய ரீதியில் அனைத்துத் தொழிற்சங்கங்களும் இணைந்து நாளை நடத்தும் ஜனநாயகப் போராட்டத்தில் இருந்து கொள்வதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தின் தவறான வரி விதிப்பு, மின்சாரக் கட்டண உயர்வு, வாழ்க்கைச் செலவு பன்மடங்கு அதிகரிப்பு, மக்களின் ஜனநாயக உரிமையை மறுத்தல், ஜனநாயக போராட்டங்கள் நசுக்கப்படுகின்றமை போன்ற அனைத்துத் தரப்பினரதும் சொல்லொணா துன்பங்களை அரசாங்கம் கருத்தில் கொள்ளாததைக் கண்டித்து நடைபெறும் நடாளாவிய போராட்டத்தோடு அதிபர்கள், ஆசிரியர்களின் பல்வேறு பிரச்னைகளை அரசாங்கம் தீர்க்காது தட்டிக் கழிப்பதையும் இணைத்து இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் போராட்டத்தில் இணைந்துகொள்ள உள்ளது.

அதிபர், ஆசிரியர்களின் வேதன முரண்பாடுகள் இன்னமும் தீர்க்கப்படாமை, பாடசாலை செல்வதற்கான போக்குவரத்து செலவு அதிகரிப்பு, வங்கிக் கடன் வட்டி வீதங்களின் அதிகரிப்பு, மாணவர்களின் போசாக்கு குறைபாடு, கற்றல் உபகரணங்களின் விலை உயர்வு, பொதுப் பரீட்சை மதிப்பீட்டின் முக்கியத்துவத்தை உணராமை, அதற்கான கொடுப்பனவுகளை அதிகரிக்காமை போன்ற கல்விப்புல பிரச்னைகளையும் முன்வைத்து நாளை புதன்கிழமை நடக்கும் நாடளாவிய போராட்டத்தில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் முழுமையாக இணைந்து கொள்வதோடு அன்றைய நாள் அதிபர்கள், ஆசிரியர்கள் அனைவரும் பாடசாலைக்குச் செல்லாது தமது எதிர்ப்பை வெளிப்படுத்துமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளது. (அ)

# 120,000 மில்லியன் ரூபாய் திறைசேரி உண்டியல் 15ஆம் திகதி ஏலவிற்பனை

கொழும்பு, மார்ச் 14

மார்ச் 15ஆம் திகதி ஏல விற்பனையின் ஊடாக ஒரு இலட்சத்து 20 ஆயிரம் மில்லியன் ரூபாவுக்கான திறைச்சேரி உண்டியல்கள் வழங்கப்படவுள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது

இதன்படி, 91 நாட்கள் முதிர்வு காலத்தை கொண்ட 50 ஆயிரம் மில்லியன் ரூபாவுக்கான திறைசேரி உண்டியல்களும், 182 நாட்கள் முதிர்வு காலத்தை கொண்ட 35 ஆயிரம் மில்லியன் ரூபாவுக்கான திறைசேரி உண்டியல்களும், 364 நாட்கள் முதிர்வு காலத்தை கொண்ட 35 ஆயிரம் மில்லியன் ரூபாவுக்கான திறைசேரி உண்டியல்களும் ஏலமிடப்படவுள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது. (அ)

# யாழ்.போதனா வைத்தியசாலை, சென்.ஜோன்ஸ் இணைந்து புற்றுநோய் விழிப்புணர்வு நடைபவனி

யாழ்ப்பாணம், மார்ச் 14

புற்றுநோயை முன்கூட்டியே கண்டறிவது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவைக் காட்டவும் யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபவனி இடம்பெற்றது.

நேற்று திங்கட்கிழமை யாழ்.போதனா வைத்தியசாலையின் புற்றுநோய்ப் பிரிவின் ஏற்பாட்டிலும் இருநூறாவது ஆண்டுவிழாவைக் கொண்டாடும் யாழ் பரியோவான் கல்லூரியுடன் இணைந்தும் இந்த நடைபவனி மேற்கொள்ளப்பட்டது.




நடைபவனி யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரியில் இருந்து ஆரம்பிக்கப்பட்டு பிரதான வீதி ஊடாக யாழ். போதனா வைத்தியசாலையை வந்தடைந்து மீண்டும் பரியோவான் கல்லூரியைச் சென்றடைந்தது.இதில் கல்லூரி மாணவர்கள், பழைய மாணவர்கள், வைத்தியசாலைச் சமூகத்தினர், நலன்விரும்பிகள் என பலரும் பங்கேற்றனர். (அ)

# பேராதனை புதுமுக மாணவர்களுக்கு உடல், உள மருத்துவப் பரிசோதனை!

கொழும்பு, மார்ச் 14

பேராதனை பல்கலைக்கழகத்திற்கு புதிதாக உள்வாங்கப்படும் அனைத்து மாணவர்களும் இந்த வருடம் முதல் உடல் மற்றும் உள மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளதாக அதன் உபவேந்தர் பேராசிரியர் எம்.டி.லமவன்ச தெரிவித்தார்.

தற்போது நடைபெறும் உடற்கூறு பரிசோதனையுடன் கூடுதலாக உளவியல் பரிசோதனையும் நடத்தப்படும் என்றும், இதன் மூலம் மாணவர்களிடையே உள்ள மனநலப் பிரச்னைகளை கண்டறிய முடியும் என நம்புவதாகவும் அவர் கூறினார்.

பல்கலைக்கழக உறுதிப்படுத்தல் கட்டிடத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டபோதே துணைவேந்தர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீட மாணவர்கள் பலர் தற்கொலை செய்துகொண்டதையடுத்து பல்கலைக்கழக பேரவை இந்த புதிய முடிவை எடுத்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

மேலும், பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பாடத்திட்டம் உலக அங்கீகாரம் பெற்ற உயர்கல்வித் தரங்களுக்கு அமைவாகவே உள்ளதாகவும், அந்தப் பாடநெறிகளால் மாணவர்கள் மன உளைச்சலுக்கு ஆளாவதற்கு எந்த காரணமும் இல்லை என்றும் அவர் கூறினார்.

ஆனால் தொற்றுநோய் காரணமாக இரண்டு வருட ஆரம்பப் படிப்பைத் தவறவிட்ட மாணவர்கள் ஒன்லைன் கல்வியிலிருந்து விடுபட்டு வகுப்பறைக் கல்விக்கு திரும்பிய பிறகு இந்த குழப்பமான சூழ்நிலை உருவாகலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

ஆனால் அவர்களை உயர்ந்த மனநிலைக்கு கொண்டு வருவதற்காக மனநலப் பரிசோதனைக்கு அனுப்புவதோடு, விளையாட்டு, கலை மற்றும் கலாசார நடவடிக்கைகளுக்கும் அனுப்பவுள்ளதாக துணைவேந்தர் குறிப்பிட்டார்.

பட்டதாரி மாணவர்களுக்கு கூடுதல் வருமானத்துடன் பகுதி நேர வேலை வாய்ப்புகளை வழங்குவதுடன், மாணவர் நலன்புரி நிதியத்தை இந்த ஆண்டு முதல் நிறுவ நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் துணைவேந்தர் பேராசிரியர் எம்.டி. லமவன்ச மேலும் குறிப்பிட்டார். (அ)

# ஹரக் கட்டா, குடு சலிந்து விரைவில் இலங்கைக்கு!

கொழும்பு, மார்ச் 14

மடகஸ்கருக்குச் சென்றுள்ள குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் அடங்கிய விசேட பொலிஸ் குழு, மடகாஸ்கர் அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட பாதாள உலக போதைப்பொருள் கடத்தல்காரர்களான ஹரக் கட்டா மற்றும் குடு சலிந்துவுடன் இலங்கை திரும்பவுள்ளனர்.

நான்கு பேர் கொண்ட பொலிஸ் குழுவில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப் படையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இரண்டு உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள் உள்ளனர். மற்ற இரண்டு அதிகாரிகள் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப் படையின் பிரதான பரிசோதகர்கள் ஆவர். அவர்கள் பாதாள உலக குற்றவாளிகள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் விசேட அதிரடிப்படையின் விசேட குழுவை பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகளாவர்.

இந்தக் குழுவில் அரச புலனாய்வுப் பிரிவின் அதிகாரி ஒருவர் இருக்கவேண்டும். ஆனால் கடைசி நேரத்தில் அவர் இந்தப் பயணத்தில் சேர்க்கப்படவில்லை.

தற்போது மடகஸ்கரில் உள்ள இந்த குழு, சம்பந்தப்பட்ட விமான நிறுவனத்துடன் புரிந்துணர்வு செய்து குற்றவாளிகள் இருவரையும் இலங்கைக்கு அழைத்து வரவுள்ளது. இதற்கு முன்னதாக, ஒரு குற்றவாளிக்கு மூன்று பாதுகாப்பு அதிகாரிகள் தேவை என்ற நிபந்தனைகளை விமான நிறுவனங்கள் அறிவித்திருந்தன. இது தொடர்பில் நீண்ட கலந்துரையாடலுக்குப் பின்னர், ஒவ்வொரு குற்றவாளிக்கும் இரண்டு பாதுகாவலர்களை நியமித்து இந்தக் குற்றவாளிகளை இலங்கைக்குக் கொண்டுவருவதற்கு ஒரு விமான நிறுவனம் இறுதியாக ஒப்புக் கொண்டுள்ளது.

இது ஒரு ஆபிரிக்க விமான நிறுவனம். இந்த இரண்டு குற்றவாளிகளையும் ஒரே விமானத்தில் இலங்கைக்கு அழைத்து வருவதற்கான சாத்தியம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த இரண்டு குற்றவாளிகளையும் இலங்கைக்கு அழைத்து வந்த பின்னர் தடுப்புக் காவலில் வைக்க உத்தரவு பெற்று நீண்ட விசாரணை நடத்த பொலிஸ் அதிகாரிகள் தற்போது முடிவு செய்துள்ளனர்.

போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடும் இவர்கள் பயங்கரவாத அமைப்புகளுடன் ஆயுத பேரத்தில் ஈடுபட்டு வருவதாக கிடைத்த தகவலே இதற்கு காரணம்.

இதன்படி, இருவரும் குற்றப் புலனாய்வுப் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகள் நடத்தப்படவுள்ளன.

பிரதிப் பொலிஸ் மா அதிபரின் மேற்பார்வையில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு வெளியில் இவ்விரு குற்றவாளிகளையும் விசாரணை செய்ய பல்வேறு தரப்பிலிருந்து யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

# அனைத்து பிரஜைகளுக்கும் ஒன்றுகூடும் உரிமை உண்டு

## மனித உரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 14

**ஜனநாயக நாடான இலங்கையில் அனைத்து பிரஜைகளுக்கும் ஒன்றுகூடுதல் மற்றும் கருத்துகளை வெளியிடுவதற்கான சுதந்திரம் காணப்படுவதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.**

இந்த உரிமை தொழிற்சங்கங்கள், தொழிற்சங்க அமைப்புகள், மாணவர்கள் மற்றும் தனிநபர்கள் உள்ளிட்ட நாட்டின் வெவ்வேறு தரப்பினருக்கும் பொருந்துமென ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இதுபோன்ற உரிமைகள் வெளிப்படுத்தப்பட்ட பல சந்தர்ப்பங்களில் ஆர்ப்பாட்டக்காரர்களை கலைப்பதற்காக சட்டத்தை அமுல்படுத்தும் அதிகாரிகள் கண்ணீர்ப்புகை, நீர்த்தாரை மற்றும் தடிகளை பயன்படுத்தியதாக முறைப்பாடுகளும் குற்றச்சாட்டுகளும் முன்வைக்கப்பட்டுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இலங்கையில் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் பொறுப்பான பிரதான அமைப்பாக எதிர்ப்பு தெரிவிக்கும் உரிமையைப் பயன்படுத்துவதை உறுதிப்படுத்தும் வகையில் இந்த நிலைமை குறித்து பரிசீலிக்கப்படவேண்டும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், இந்த நிலைமை தொடர்பான விசாரணை நடவடிக்கைகளை ஆணைக்குழு ஆரம்பித்துள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட எந்தவொரு பிரஜையையும் வரவழைத்து விசாரணை செய்வதற்கும் அவர்களிடமுள்ள ஆவணங்களைச் சரிபார்த்தல் உட்பட விசாரணை செய்வதற்கும் தமக்கு சட்டபூர்வ அதிகாரம் உள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு இதன்போது வலியுறுத்தியுள்ளது. (அ)

# தேர்தலை நடத்துமாறு கோரி விரைவில் சர்வகட்சிக் கூட்டம்

கொழும்பு, மார்ச் 14

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை தொடர்ந்து பிற்போடும் அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு எதிராக ஒன்றிணைந்து செயற்படுவது தொடர்பில் எதிர்க்கட்சிகளை ஒன்றிணைத்து சர்வகட்சி மாநாட்டை நடத்த எதிர்பார்த்துள்ளோம் என லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொடர்பில் உயர்நீதிமன்றம் இடைக்காலத் தடையுத்தரவுக்கு அப்பாற்பட்ட வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செயற்படுகிறார். வாக்கெடுப்புக்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தேவையான நிதியை வழங்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழு அனுப்பிய கடிதத்துக்கு திறைச்சேரியின் செயலாளர் வழங்கியுள்ள பதில் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை.

நிதி விடுவிப்பு தொடர்பில் நிதியமைச்சரின் அனுமதியை பெற்றுக்கொள்ளவேண்டும் என திறைசேரியின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார். நிதியமைச்சராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவி வகிக்கிறார். ஆகவே அவர் தேர்தலுக்கு நிதி ஒதுக்குவார் என்று குறிப்பிட முடியாது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை தொடர்ந்து பிற்போடும் அரசாங்கத்தின் முறையற்ற செயற்பாட்டுக்கு சகல அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து எதிர்ப்பு தெரிவிக்க வேண்டும்.

அதற்காக சகல எதிர்க்கட்சிகளையும் உள்ளடக்கிய வகையில் சர்வகட்சி கூட்டத்தை நடத்த எதிர்பார்த்துள்ளோம்.

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதாக குறிப்பிட்டுக்கொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டு மக்களின் ஜனநாயக உரிமைகளை இல்லாதொழிக்க முயற்சிக்கிறார் -என்றார். (அ)

# போதை மாத்திரையுடன் பொறியியலாளர் கைது

கொழும்பு, மார்ச் 14

போதை மாத்திரை விற்பனையில் ஈடுபட்டார் எனக் கூறப் படும் சிவில் பொறியியலாளர் ஒருவர் கைது செய்யப்பட்டார் என கொஸ்மோதர பொலிஸார் தெரிவித்தனர்.

புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் வரல்ல பிரதேசத்தில் வசிக்கும் 31 வயதுடைய சிவில் பொறியியலாளர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

சந்தேக நபர் போதைப்பொருளை பயன்படுத்துவதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது. போதைப்பொருளுக்கு அடிமையானவர்களை இலக்கு வைத்து மாத்திரை ஒன்றை 100 ரூபாவுக்கு விற்பனை செய்துள்ளதாக சந்தேகநபர் வழங்கிய வாக்கு மூலத்தில் குறிப்பிட்டுள்ளார். (அ)

# நாணய நிதியக் கடனை நாசப்படுத்த தீவிரவாத தொழிற்சங்கங்கள் முயற்சி

## தனியார் பஸ் சங்கத் தலைவர் குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 14

தீவிரவாத அரசியல் கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்கங்கள் சர்வதேச நாணய நிதியத்தின் கடன் திட்டத்தை நாசப்படுத்த முயற்சிப்பதாக இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன குற்றம் சாட்டியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

சில அரசியல் கட்சிகளின் தொழிற்சங்கங்கள் நாட்டை இருண்ட யுகத்திற்கு இழுத்து மீண்டும் பாதாளத்துக்குள் தள்ள முயற்சிக்கின்றன.

இந்த பயங்கரவாதச் சதி தொடர்பான விவரங்களை இன்னும் இரண்டு வாரங்களுக்குள் அம்பலப்படுத்துவோம். இவற்றின் பின்னணியில் யார் இருக்கிறார்கள் என்பது எங்களுக்குத் தெரியும். போராட்டத்துக்குத் தயாராகும் இந்த தொழிற்சங்கங்களைச் சேர்ந்தவர்கள் அனைவரும் கோவிட் தொற்றுநோய் முடக்கத்தின்போது வீட்டில் தங்கியிருந்து மாதச் சம்பளத் பெற்று வந்தனர்.

ஆகவே நாம் அனைத்து பஸ்களையும் வழக்கமான மற்றும் அட்டவணையின்படி இயக்க முடிவு செய்துள்ளோம்.

இதன்படி, போராட்ட நாட்களில் நாங்கள் அதிகபட்ச எண்ணிக்கையாக 15,000 பஸ்களை இயக்குவோம்-என்றார். (அ)

# மரண அறிவித்தல்



## கிறிஸ்ணன் சரஸ்வதி

மாவிட்டபுரம் – கீரிமலையைப் பிறப்பிடமாகவும், சுன்னாகம், உடுவில் தெற்கை வதிவிடமாகவும் கொண்ட கிறிஸ்ணன் சரஸ்வதி அவர்கள் நேற்று (06-03-2023) திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற முருகன் – பொன்னி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற மாதர் கிறிஸ்ணன் அவர்களின் அன்பு மனைவியும், தங்கச்சிபிள்ளை, காலஞ்சென்றவர்களான பசுபதி, நடேசன், ஐயாத்துரை, நாகம்மா, இராசமணி, தேவராசா, தர்மராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ் சென்றவர்களான பொன்னம்மா, சின்னத்தங்கச்சி, தெய்வானை, பொன்னர் ஆகியோரின் அன்பு மைத்துனியும், குணசிங்கம் (இலங்கை), சந்திராதேவி (ஜேர்மனி), றஞ்சாதேவி, செல்வராசா ஆகியோரின் அன்புத் தாயாரும், ஆனந்தநிதி (இலங்கை), தேவராசா (ஜேர்மனி), சிவகுலநாயகம் ஆகியோரின் அன்பு மாமியாரும், கோபிகா, சஞ்சிகா, கௌசிகன் (இலங்கை), ரோகினி (ஐக்கிய அமெரிக்கா), நெல்சியா (ஜேர்மனி), பிறாங்கிளின், ஸ்ரெலன்சியா, மீறேஸ், ஜெய் துவாரகன், பிரசன்னா, வினித்தா, இப்ராகிம் – அக்காயா, மமதி, சாகித்தியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், மமதி, காடீஸ் (ஜேர்மனி), ரித்வின் (ஐக்கிய அமெரிக்கா) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியை எதிர்வரும் வெள்ளிக்கிழமை (17.03.2023) அன்று காலை 10.00 முதல் 1.00 மணியளவில் ஜேர்மனியில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொளளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

# சுகாதார அமைச்சு அதிகாரியான இளம்பெண்ணின் மீது தாக்குதல்!

## அவரது காதலர் கைதாகினார்

கொழும்பு, மார்ச் 14

சுகாதார அமைச்சின் முக்கிய பொறுப்பில் உள்ள 32 வயதான இளம் பெண்ணொருவரின் வீட்டுக்குள் புகுந்த காதலர், அவரை கூரிய ஆயுதத்தால் தாக்கியுள்ளார். பலத்த காயங்களுக்கு உள்ளாகிய இளம்பெண் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என மொரகஹஹேன பொலிஸார் தெரிவித்தனர்.

வீடியகொட மொஹொட்டிகொட பிரதேசத்தில் உள்ள வீட்டில் இந்த சம்பவம் நடந்தது.

வீட்டின் வரவேற்பறையில் பெரிய அளவில் இரத்தக் கறைகள் இருந்ததாகவும், பெண்ணின் தலை முடி வெட்டப்பட்டு காணப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அந்த இளம்பெண்ணின் காதலர், பொலிஸாரிடம் சரணடைந்த பின் கைது செய்யப்பட்டதாகவும் மொரகஹஹேன பொலிஸார் கூறினர்.

கடந்த 2013ஆம் ஆண்டு முதல் சந்தேக நபருடன் இணைந்து வாழ்ந்து வந்த குறித்த அதிகாரி, ஒரு வருடமாக இந்த வீட்டில் வசித்து வந்துள்ளார். காதலர் ஏற்கெனவே திருமணமானவர் என்பதும், மனைவியை விவாகரத்து செய்து விட்டு சுகாதார அமைச்சின் அதிகாரியை திருமணம் செய்ய எதிர்பார்த்திருந்தவர் என்பதும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சுகாதார அமைச்சின் அதிகாரியான இளம் பெண் வேறு ஒருவருடன் தொடர்பு வைத்திருப்பதாக, திருமணம் செய்து கொள்ளவிருந்த நபருக்கு குறுஞ்செய்தி மூலம் தெரிய வந்ததையடுத்து, கடந்த சில நாட்களாக இருவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

பதுரலியவில் உள்ள தனது தோட்டத்துக்குச் செல்வதாகக் கூறி வீட்டை விட்டு வெளியேறிய சந்தேகநபர் நேற்று முன்தினம் அதிகாலை வீடு திரும்பியதுடன் அதிகாரி உறங்கிக் கொண்டிருந்தபோது முன்பக்க ஜன்னல் கண்ணாடியை உடைத்து வீட்டினுள் நுழைந்து கூரிய ஆயுதத்தால் பல தடவைகள் தாக்கியுள்ளார் என பொலிஸார் கூறினர்.

பாதிக்கப்பட்ட பெண்ணின் அலறல் சத்தம் கேட்டு, பக்கத்து வீட்டைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் வீட்டுக்கு வந்து 1990 அம்புலன்ஸுக்கு அழைப்பை ஏற்படுத்தி அவரை மருத்துவமனையில் அனுமதித்துள்ளார்.

அவர் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக களுபோவில போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். சந்தேக நபர் கூரிய ஆயுதத்தால் தாக்கும்போது , இளம் பெண் கையால் தடுத்துள்ளார். இதன்போது அவரது விரல் துண்டாகி தரையில் விழுந்துள்ளது. தரையில் விழுந்த துண்டான விரலை அந்த இளைஞன் ஐஸில் போட்டு வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளார்.

வீட்டுக்குள் ஜன்னலுக்கு அருகாமையில் தரையில் பொலித்தீன் பையில் கூரிய ஆயுதங்கள் பலவற்றையும் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர். (அ)

ஈழநாடு



## தெருக்களில் கூடிய இலட்சக்கணக்கான மக்கள்

# இஸ்ரேல் அரசு வரலாறு காணாத எதிர்ப்பை சந்திப்பது ஏன்?

நீதித்துறை அமைப்பை மாற்றிய மைப்பதற்கான அரசாங்கத் திட்டங்களுக்கு எதிராக இலட்சக்கணக் கான இஸ்ரேலியர்கள் அணி திரண்டுள் ளனர். இது அந்த நாட்டின் வரலாற்றி லேயே மிகப்பெரிய போராட்டம் என்று அமைப்பாளர்கள் கூறுகின்ற னர்.

பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, இந்த மாற்றங்கள், நீதிமன்றங்களின் அதிகாரத் தைக் கட்டுப்படுத்தும் என்றும், அரசாங் கத்தின் கிளைகளுக்கு இடையே சமநி லையை மீட்டெடுக்கும் என்றும் கூறுகி றார். ஆனால் அது, ஜனநாயகத்தை அச்சு றுத்துவதாக எதிர்ப்பாளர்கள் கூறுகின்ற னர்.

சனிக்கிழமை நடைபெற்ற பேரணி ஒன் றில், எதிர்க்கட்சித் தலைவர் யேர் லேபிட் இது இஸ்ரேலின் 'மிகப்பெரிய நெருக்கடி" என்று கூறினார்.

இதற்கிடையில், ஞாயிற்றுக்கிழமை மேற்குக் கரை நகரமான நப்லஸ் அருகே இஸ்ரேலிய துருப்புகள் மூன்று ஆயுதம் ஏந்திய பாலஸ்தீனியர்களை சுட்டுக் கொன்றதாக இஸ்ரேலிய ராணுவம் தெரி வித்துள்ளது.

ஆயுததாரிகள் இஸ்ரேலிய ராணுவ தளவாடம் மீது துப்பாக்கிச் சூடு நடத்தி யதாகவும் இஸ்ரேலிய ராணுவம் கூறியது. இந்தச் சம்பவம் குறித்து பாலஸ்தீன அதி காரிகள் எந்தக் கருத்தும் தெரிவிக்க வில்லை.

கடந்த சில மாதங்களாக பாலஸ்தீனியர் களுக்கும் இஸ்ரேலுக்கும் இடையே வன் முறைகள் அதிகரித்து வருகின்றன.

சனிக்கிழமையன்று, 5,00,000 ஆர்ப் பாட்டக்காரர்கள் இஸ்ரேல் முழுவதும் தெருக்களில் இறங்கியதாக ஆர்ப்பாட்ட



ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். இதை ஹாரெட்ஸ் செய்தித்தாள் 'நாட்டின் வரலாற்றில் மிகப்பெரிய ஆர்ப்பாட்டம்" என்று அழைத்தது.

டெல் அவிவ் நகரில் சுமார் 2,00,000 பேர் திரண்டிருந்தனர், பலர் இஸ்ரேலின் தேசியக் கொடியை ஏந்தியிருந்தனர்.

நகர அணிவகுப்பில் பங்கேற்ற தமிர் கைட்சப்ரி, 'இதுவொரு நீதித்துறை சீர்தி ருத்தம் அல்ல. இதுவொரு புரட்சி, இது இஸ்ரேலை முழு சர்வாதிகாரத்திற்குக் கொண்டு செல்கிறது. இஸ்ரேல் எனது குழந்தைகளுக்கான ஜனநாயகமாக இருக்க விரும்புகிறேன்," என்று ராய்ட் டர்ஸ் செய்தி முகமையிடம் கூறினார்.

பேரணி வழியாகச் சென்ற காவல்து றைத் தலைவர் அமிச்சாய் எஷெட்டை எதிர்ப்பாளர்கள் கைதட்டிப் பாராட்டினர்.

பிதமர் நெதன்யாகுவின் அரசாங்கம் முன்னதாக மாவட்டத் தளபதியை நீக்க முயன்றது. ஆனால் அந்த நடவடிக்கை நாட்டின் அட்டர்னி ஜெனரலால் தடுக் கப்பட்டது.

சனிக்கிழமையன்று, 50,000 பேர் கொண்ட ஒரு கூட்டம், வடக்கு நகரமான ஹைபாவில் அணிவகுத்துச் சென்றது. இது அரசாங்கத் திட்டங்களுக்கு எதிரான நாடு தழுவிய போராட்டத்தின் 10வது வாரம்.

தெற்கு நகரமான பேவர் ஷேவாவில் பேசிய எதிர்கட்சித்தலைவர் லபிட், நாடு முன்னோடியில்லாத நெருக்கடியை எதிர் கொள்கிறது என்று எச்சரித்தார்.

'பயங்கரவாத அலை நம்மைத் தாக்கு கிறது, நமது பொருளாதாரம் வீழ்ச்சிய டைகிறது, பணம் நாட்டைவிட்டு வெளி யேறுகிறது. ஈரான் நேற்று சவூதி அரேபி யாவுடன் ஒரு புதிய ஒப்பந்தத்தில் கையெ ழுத்திட்டது. ஆனால் இந்த அரசாங்கம் இஸ்ரேலிய ஜனநாயகத்தை நசுக்குவதில் மட்டுமே அக்கறை கொண்டுள்ளது," என்று அவர் கூறினார்.

புதிய சீர்திருத்தங்கள், நீதிபதிகளைத் தேர்ந்தெடுப்பதில் அரசாங்கத்திற்கு தீர்க் கமான செல்வாக்கைக் கொடுப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளன. மேலும், நிர்வாகத்திற்கு எதிராக தீர்ப்பளிக்கும் அல்லது சட்டத்தை முறியடிக்கும் உச்ச நீதிமன்றத்தின் திறனைக் கட்டுப்படுத்து கின்றன.

இந்தப் பிரச்னை இஸ்ரேலிய சமுதா யத்தில் ஆழமான பிளவுகளை ஏற்படுத்தி யுள்ளது. இஸ்ரேலிய ராணுவத்தின் முது கெலும்பாகத் திகழும் ரிசர்வ் படையினர், தங்கள் எதிர்ப்பைப் பதிவு செய்யும் வித மாக, பணிக்குச் செல்வதைத் தவிர்க்க உள்ளதாக மிரட்டி வருகின்றனர்.

கடந்த வாரம், எதிர்பாராத நடவடிக் கையாக ஓர் உயரடுக்கு இஸ்ரேலிய விமா னப்படை பிரிவில் உள்ள டஜன் கணக் கான ரிசர்வ் போர் விமானிகள் தாங்கள் பயிற்சிக்கு வரப்போவதில்லை என்று கூறி னர். பின்னர் அவர்கள் போக்கை மாற்றிக் கொண்டு தங்கள் தளபதிகளுடன் பேச்சு வார்த்தை நடத்த ஒப்புக்கொண்டனர்.

வியாழன் அன்று, சாலைகளை மறித்த எதிர்ப்பாளர்கள், நெதன்யாகு நாட்டை விட்டு வெளியேறுவதைத் தடுக்க முயன் றனர். பின்னர் அவர் ரோம் புறப்பட்டார்.

அரசியல் எதிரிகளால் போராட்டங் கள் தூண்டிவிடப்படுவதாகக் கூறி, சலச லப்பை எதிர்கொள்வதில் இஸ்ரேலிய அரசாங்கம் உறுதியாக நிற்கிறது.

ஏற்கெனவே, நாடாளுமன்றம் வழியா கச் செல்லத் திட்டமிட்ட சீர்திருத்தங்கள் நீதித்துறையை அரசியலாக்கும் சர்வாதி கார அரசாங்கத்திற்கு வழிவகுக்கும் என்று விமர்சகர்கள் கூறுகின்றனர்.

ஆனால், நீதிமன்றங்கள் தங்கள் அதி காரங்களை மீறுவதைத் தடுக்கும் வகை யில் சீர்திருத்தங்கள் வடிவமைக்கப்பட் டுள்ளன என்றும் கடந்த தேர்தலில் அவை இஸ்ரேலிய மக்களால் வாக்களிக்கப்பட் டதாகவும் நெதன்யாகு கூறுகிறார். ●

# வடமாநில தொழிலாளர் பற்றிய பேச்சு:

## பிரசாந்த் கிஷார் ட்வீட்டும் சீமான் மீதான வழக்கும்!



ஈரோடு கிழக்கு இடைத் தேர்தல் பிரசாரத்தில் சர்ச்சைக்குரிய வகையில் சீமான் பேசிய பேச்சு தொடர் பாக ஏற்கெனவே வழக்குத் தொடரப்பட் டிருந்த நிலையில், வட மாநிலத் தொழி லாளர் குறித்த அவரது கருத்துகளுக்காக கூடுதல் பிரிவுகள் சேர்க்கப்பட்டுள்ளன.

வட தொழிலாளர்கள் தொடர்பான சீமான் பேச்சை பகிர்ந்து அது வெறுப்பை வளர்க்கும் இத்தகைய பேச்சு மீது ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று தேர்தல் வியூக நிபுணர் பிரசாந்த் கிஷோ ர் மார்ச் 10-ம் தேதி ஒரு ட்வீட் செய்தி ருந்தார்.

இந்நிலையில் அருந்ததியர் குறித்து சீமான் பேசிய பேச்சு தொடர்பான வழக் கில் கூடுதல் பிரிவுகள் சேர்க்கப்பட்டுள் ளன.

தமிழ்நாட்டில் பிகார் உள்ளிட்ட வட மாநிலங்க ளைச் சேர்ந்த தொழிலா ளர்கள் இலக்கு வைக்கப் பட்டு தாக்கப்படுவதாக வும் கொலை செய்யப்படு வதாகவும் சமூக ஊடகத் தில் பரவிய போலி காணொளிகள் வெளிமா நில தொழிலாளர்கள் மத் தியில் பீதியை ஏற்படுத் தின.

இந்த போலி காணொ ளிகள் வைரலாக பரவிய தைத் தொடர்ந்து பிகார் போன்ற மாநிலங்களின் அரசியலிலும் இந்த விவகாரம் எதிரொலித்தது. இதை தொடர்ந்து பிகார் மற்றும் ஜார்க ண்ட் மாநிலத்தைச் சேர்ந்த அரசு அதிகாரிகள் உண்மை சூழலை அறிந்துகொள்வதற் காக தமிழ் நாடு வந்தனர்.

இதனிடையே, இந்த வீடியோக்கள் போலியானவை என தமிழ்நாடு காவல் துறை மறுப்பு தெரிவித்த நிலையில் அத னைப் பரப்பியவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதேபோல், தொழி லாளர்கள் அச்சத்தில் தமிழ்நாட்டை விட்டு வெளியேறுவதாக செய்திகள் வெளிவரத் தொடங்கிய நிலையில், தமிழ் நாடு அரசும் காவல்துறையும் இதனை முற்றிலுமாக மறுத்துவிட்டன. மேலும், புரளி பரப்பியதாக சிலர் கைதும் செய் யப்பட்டனர்.

இந்நிலையில், பிகாரைச் சேர்ந்தவரும், பிரபல தேர்தல் வியூக நிபுணருமான பிரசாந்த் கிஷோர் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் பேசியிருந்த பொதுக்கூட்ட காணொளி ஒன்றை கடந்த வெள்ளிக்கிழமையன்று தனது டிவிட்டர் பக்கத்தில் பகிருந்திருந் தார். அதில், 'நான் ஆட்சிக்கு வந்தால் இந்திக்காரர்கள் எல்லாம் அவர்களே பெட்டியைக் கட்டிக்கொண்டு போய்வி டுவார்கள். எத்தனைபேரை எங்கு வச்சி வெளுப்பேன் என்று தெரியாது. கஞ்சா வழக்கு, பாலியல் தொல்லை வழக்கில் ஆயிரம் பேரை உள்ளே தூக்கிப் போட்டு அவர்களுக்கு சோறு போடாமல் விட் டால் சரியாகிவிடும்" என்று சீமான் பேசி யிருந்தது அதில் பதிவாகியிருந்தது.

ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தேர்தலில் நாம் தமிழர் கட்சியின் சார்பில் போட்டி யிட்ட மேனகா நவநீதனை ஆதரித்து சீமான் திருநகர் காலனியில் கடந்த மாதம் 13ஆம் தேதி மேற்கொண்ட பிரசாரத்தின் போது பேசியதன் சிறு பகுதியை தான் பிரசாந்த் கிஷோர் தனது டிவிட்டர் பக் கத்தில் பகிருந்திருந்தார்.

இந்த பிரசாரக் கூட்டத்தில், பட்டிய லின அருந்ததியர் மக்கள் குறித்து சர்ச்சை ஏற்படுத்தும் வகையில் அவதூறான கருத் துகளைத் தெரிவித்ததாக, ஈரோடு கிழக்கு தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலரிடம் பல்வேறு அமைப்பினர் புகார் தெரிவித் திருந்தனர். இது தொடர்பாக விளக்கம ளிக்க நாம் தமிழர் வேட்பாளர் மேனகா நவநீதனுக்குத் தேர்தல் ஆணையம் நோட் டீஸ் அனுப்பியது.

இதேபோல், பகுஜன் சமாஜ் கட்சி மாவட்ட தலைவர் ஈஸ்வரன் அளித்த புகாரின் பேரில், சீமான் மீது, எஸ்சி-எஸ்டி வன்கொடுமை தடுப்புச் சட்டம் உள்பட 3 பிரிவுகளில் கருங்கல்பாளை யம் போலீஸார் பிப்ரவரி 22ஆம் தேதி வழக்குப் பதிவு செய்தனர்.

இந்நிலையில், புலம்பெயர்ந்த தொழி லாளர்கள் குறித்து சமூக ஊடகங்களில் பரப்பப்பட்ட வீடியோவின் அடிப்படை யிலும் சாட்சிகளிடம் மேற்கொண்ட விசா ரணை, வீடியோ ஆதாரங்களின் பகுப் பாய்வு ஆகியவற்றின் அடிப்படையிலும் வன்முறையை தூண்டும் வகையில் பேசி யது, தேசிய ஒருமைப்பாட்டுக்கு குந்தகம் ஏற்படுத்தும் வகையில் பேசியது உள்ளிட் டப் பிரிவுகளில் சீமான் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், திருப்பூர் மாவட்ட போலீஸ் பெயரில் உள்ள ஒரு ட்விட்டர் கணக்கில் இன்று ஒரு ட்வீட் பதிவு செய் யப்பட்டுள்ளது. அதில் பிரசாந்த் கிஷோ ார் எழுப்பிய குற்றச்சாட்டு தொடர்பாக ஏற்கெனவே சட்ட நடவடிக்கை தொடங் கப்பட்டுவிட்டது என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. ●

# இலங்கையில் நழுவிச்செல்லும் அரசியல் தீர்வு

இலங்கை பாராளுமன்றத்துக்கு அண்மையாக பெப்ரவரி தொடக்கத்தில் கூடிய பௌத்த பிக்குகள் அரசியலமைப்புக்கான 13 வது திருத்தத்தின் பிரதியொன்றை தீயிட்டுக் கொளுத்தினர். அந்த திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தப்போவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியதற்கு தங்களது எதிர்ப்பை அவர்கள் வெளிக்காட்டினர். தற்போதைய சட்டத்தை நடைமுறைப்படுத்துவது நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்டவர் என்ற வகையில் தனது பொறுப்பு என்று அவர் சர்வ கட்சி மகாநாடொன்றில் கூறியிருந்தார்.

'சுமார் 37 வருடங்களாக 13 வது திருத்தம் அரசியலமைப்பின் ஒரு பகுதியாக இருந்துவருகிறது. நான் அதை நடைமுறைப்படுத்த வேண்டும் அல்லது எவராவது அதை இல்லாதொழிக்கவேண்டும்" என்று ஜனாதிபதி தெரிவித்தார். எந்த வகையிலும் நாட்டைப் பிளவுபடுத்த தான் தயாரில்லை என்றும் சிங்கள தேசத்துக்கு துரோகம் செய்யப்போவதில்லை என்றும் அவர் உறுதியாகக் கூறியபோதிலும் பிக்குகள் அந்த திருத்தத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதை காணக் கூடியதாக இருந்தது.

**நிறைவேற்றப்படாத ஒரு உறுதிமொழி**

ஜனாதிபதி விக்கிரமசிங்கவின் உறுதிமொழியோ அல்லது பிக்குகளின் எதிர்ப்போ ஒன்று இலங்கைக்கு புதியவையல்ல. மகிந்த ராஜபக்ச உட்பட முன்னைய ஜனாதிபதிகளும் பல தடவைகள் அதே உறுதிமொழியை வழங்கினார்கள். அந்த வேளைகளிலும் பிக்குகளும் ஏனைய பிற்போக்கு குழுக்களும் இதே போன்று ஆர்ப்பாட்டங்களைச் செய்தனர்.

அதேவேளை, சமத்துவம், கௌரவம் மற்றும் சுயநிர்ணய உரிமைக்கான கோரிக்கையை தொடர்ச்சியாக முன்வைத்துப் போராடிவருகின்ற இலங்கை தமிழர்களுக்கும் 13 வது உறுதிமொழி உண்மையில் நடைமுறைப்படுத்தப்பட்டால் அது எதைப்போன்று இருக்கக்கூடும் என்பது தெரியாது. அதிகாரப் பரவலாக்கம் அரசியலமைப்பில் சுமார் நான்கு தசாப்தங்களாக இருந்து வருகின்ற போதிலும் (1987 ஜூலை இந்திய - இலங்கை சமாதான உடன்படிக்கையின் விளைவு அது) அந்த திருத்தச்சட்டம் அதன் எழுத்திலும் உணர்விலும் இன்றுவரை நடைமுறைப்படுத்தப்பட்டதை அவர்கள் ஒருபோதும் கண்டதில்லை.

13 வது திருத்தம் எப்போதுமே சர்ச்சைக்குரியதாகவே இருந்துவருகிறது. எதிர்க்கின்ற சிங்களவர்களைப் பொறுத்தவரை அது இந்தியாவினால் திணிக்கப்பட்டது என்றே நோக்குகிறார்கள். மாகாண மட்டத்தில் தமிழர்களுக்கு 'அளவு கடந்த அதிகாரங்களை" அந்த திருத்தம் வழங்குகின்றது என்றும் அதனால் கொழும்பில் உள்ள மத்திய அரசாங்கத்துக்கு ஒரு அச்சுறுத்தலாக அமைகிறது என்றும் சிங்களவர்கள் நம்புகிறார்கள். இலங்கையின் சகல ஒன்பது மாகாணங்களுக்கும் ஒரேயளவான அதிகாரங்களையே திருத்தம் பரவலாக்குகிறது என்ற உண்மையை கருத்திற்கொள்ளாமல் அவர்கள் அந்த நிலைப்பாட்டை கொண்டிருக்கிறார்கள். இலங்கையின் ஏழு மாகாணங்கள் சிங்களவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்டவையாகும்.

மறுபுறத்தில் தமிழர்கள் இலங்கையின் ஒற்றையாட்சி அரசியலமைப்பின் கீழ் 13 வது திருத்தம் மிகவும் மட்டுப்படுத்தப்பட்டளவு அதிகாரங்களையே தருகிறது என்ற நிலைப்பாட்டை கொண்டிருக்கிறார்கள். அர்த்தபுஷ்டியான அதிகாரப்பரவலாக்கத்தை அது செய்யவில்லை என்று அவர்கள் குறை கூறுகிறார்கள். அதேவேளை தமிழர்களில் சிலர், திருத்தம் போதுமான அதிகாரங்களை தரவில்லை என்று பரவலாகக் கருதப்பட்டாலும் கூட ஒருவகையான அதிகாரப்பகிர்வை உத்தரவாதம் செய்கின்ற ஒரேயொரு சட்ட ஏற்பாடாக தற்போது இருப்பதால் அதை முழுமையானதும் நிலைபேறானதுமான அரசியல் இணக்கத்தீர்வொன்றுக்கான பேச்சுவார்த்தையில் 'தொடக்கப்புள்ளியாக" நோக்குகிறார்கள்.

அந்த திருத்தம் மாகாணங்களுக்கு விவசாயம், கல்வி, சுகாதாரம், வீடமைப்பு, உள்ளூராட்சி, திட்டமிடல், வீதிப்போக்குவரத்து மற்றும் சமூக சேவைகளில் சட்டவாக்க அதிகாரத்தை கொடுத்த போதிலும் பல பொருள்படக்கூடியதாக அமைந்திருக்கும் பொதுப்பட்டியல் மற்றும் அரசியலமைப்பின் விஞ்சிய மதிப்புடைய சில பிரிவுகள் காரணமாக மத்திய அரசாங்கமே மிகவும் பலம்பொருந்தியதாக இருக்கிறது.

**தமிழர்களின் ஈடுபாடுகள்**

எதிர்பாராத முறையில் ஜனாதிபதியாக பதவியேற்ற சில மாதங்களில் விக்கிரமசிங்க நாட்டின் நீண்டகால இனப்பிரச்சினைக்கு இலங்கையின் சுதந்திரதினமான 2023 பெப்ரவரி 4 திகதிக்கு முன்னதாக அரசியல் தீர்வொன்று காணப்படுவதை உறுதிசெய்யப்போவதாக அறிவித்தார். ஒரு மிகவும் குறுகிய கால அவகாசத்தைக் கொண்ட அவரது அந்த அறிவிப்பு 'இப்போது அல்லது ஒருபோதுமில்லை' என்ற தொனியில் அமைந்தது.

> **இலங்கையில் சீனாவின் செல்வாக்கை தடுப்பதற்கான முயற்சிகளில் தீவிர கவனத்தைச் செலுத்தும் புதுடில்லி 13வது திருத்தத்தை நடைமுறைப் படுத்தவேண்டிய தேவை குறித்து வழமையான அறிக்கைகளை வெளியிடுவதை தவிர வேறு எதையும் அது விடயத்தில் பெரிதாக செய் வதில்லை என்று அவதானிகள், விமர்சகர்கள் கூறுகிறார்கள்.**

வடக்கு,கிழக்கு மாகாணங்களின் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதான அணியான தமிழ் தேசிய கூட்டமைப்பு பேச்சுவார்த்தைகளில் ஈடுபட இணங்கியது.என்றாலும் அதன் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஜனாதிபதியின் நேசக்கரத்தில் ஐயுறவு இருந்தது. கூட்டமைப்பின் போட்டிக் கட்சியான தமிழ் தேசிய மக்கள் முன்னணி சமஷ்டி அரசியலமைப்பு ஒன்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு தீர்வு குறித்து ஆராய்வதற்கு ஜனாதிபதி பகிரங்கமாக முன்வராதபட்சத்தில் பேச்சுவார்த்தைகளில் பங்கேற்பதில் எந்த அர்த்தமும் இல்லை என்ற தெளிவான ஒரு நிலைப்பாட்டை எடுத்தது.

முதலில் இருந்தே தொடங்குவதற்கு பதிலாக ஐந்து அம்சங்களில் அரசாங்கம் உடனடியாக சில நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்ற யோசனையை முன்வைத்து தமிழ் தேசிய கூட்டமைப்பு பேச்சுவார்த்தைக்குப் போனது. தேசிய காணி ஆணைக்குழுவையும் மாகாணப் பொலிஸ் படையையும் அமைத்தல். மாகாணசபைகளுக்கு மீண்டும் அதிகாரங்களைக் கொடுப்பதற்கு குறிப்பிட்ட சில சட்டங்களை மாற்றியமைத்தல் அல்லது திருத்துதல். பாடசாலைகளையும் வைத்தியசாலைகளையும் நிருவகிப்பதற்கு அவசியமான நிருவாக அதிகாரங்களை மாகாணசபைகளுக்கு வழங்குதல் என்பவையே அந்த யோசனையாகும். ஆனால் அந்த விவகாரங்கள் தொடர்பில் எந்தவிதமான உருப்படியான நடவடிக்கையையும் அரசாங்கம் எடுக்காத நிலையில் பேச்சுவார்த்தைகளை தொடருவதில் அர்த்தமில்லை என்று கூட்டமைப்பு கூறியது.

கூட்டமைப்பின் தலைவரும் முதுபெரும் அரசியல்வாதியுமான இரா. சம்பந்தன் 2019 ஜூலையில் பாராளுமன்றத்தில் நிகழ்த்திய உரையொன்றில் தேசிய இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு கடந்த காலத்தில் பல்வேறு அரசாங்கங்களினால் முன்னெடுக்கப்பட்ட பல முயற்சிகள் 1987 ஆம் ஆண்டின் 13 வது திருத்தத்தில் விதந்துரைக்கப்பட்டிருப்பவற்றுக்கும் அப்பால் அதிகாரங்களை வழங்கக்கூடிய யோசனைகளைக் கொண்டிருந்தன என்று விளக்கமளித்தார்.

ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் பதவிக்காலத்தில் 1991 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட மங்கள முனசிங்க தெரிவுக்குழு, ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அதிகாரத்தில் இருந்தபோது 2000 ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட புதிய அரசியலமைப்பு யோசனைகள், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அதிகாரத்தில் இருந்தபோது நியமிக்கப்பட்ட பேராசிரியர் திஸ்ஸ விதாரண தலைமயிலான சர்வ கட்சி பிரதிநிதித்துவக் குழுவின் யோசனைகள், மைத்திரபால சிறிசேன - விக்கிரமசிங்க அரசாங்க காலத்தில் புதிய அரசியலமைப்பு ஒன்றை வரைவதற்கு முன்னெடுக்கப்பட்ட முயற்சிகள் ஆகியவற்றை சம்பந்தன் தனது அந்த உரையில் சுட்டிக்காட்டினார்.

அரசியல் உரிமைகளுக்கான தமிழச் சமூகத்தின் நீண்டகால போராட்டங்களை விளக்கி மிகவும் மனதை நெகிழவைக்கும் வகையில் உரையாற்றிய அவர், 'தமிழர்கள் தனித்துவமான மொழியையும் கலாசார அடையாளத்தையும் கொண்ட தனித்துமான மக்களாவர். வரலாற்று ரீதியாக நாம் வடக்கு, கிழக்கில் வாழ்ந்து வந்திருக்கிறோம். இரண்டாம்தர குடிமக்களாக எம்மால் வாழமுடியாது. நாம் சுயமரியாதையுடனும் கௌரவத்துடனும் வாழவேண்டும். சாத்தியமானளவுக்கு கூடுதல் பட்ச அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும். ஐக்கியப்பட்ட, பிளவுபடாத, பிரிக்கமுடியாத இலங்கையொன்றுக்குள் அதிகாரங்கள் பகிரப்படவேண்டும். எமது விதியை தீர்மானிப்பவர்களாக நாமே இருக்க வேண்டும்" என்று கூறினார்.

'இதை எவ்வளவு விரைவாக நீங்கள் செய்கிறீர்களோ அந்தளவுக்கு நல்லது. இதை செய்யவில்லையானால், நல்ல காரியத்தை செய்வதை நீங்கள் தவிர்த்தால் தமிழ் மக்கள் நீண்டகாலத்துக்கு அமைதியாக இருப்பார்கள் என்று நான் நினைக்கவில்லை" என்று சபையில் சம்பந்தன் முழங்கினார்.

ஆனால், மேற்கூறப்பட்ட முயற்சிகள் சகலதினதும் முடிவுகள் கடதாசியில் அல்லது நிறைவேற்றப்படாத நீண்ட உறுதிமொழிகளின் வரிசையில் இன்னொன்றாகவே இருந்தன. வழங்கிய எந்த உறுதிமொழி தொடர்பிலும் ஆளும் சிங்கள அதிகாரவர்க்கம் தொடர் நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை. பாரிய மனித இழப்புகளுடனும் தமிழர்களுக்கு சொல்லொணா அவலங்களுடனும் உள்நாட்டுப்போர் 2009 ஆண்டு முடிவுக்கு வந்தபோது நீதியான அரசியல் தீர்வுடன் கூடிய உண்மையான நல்லிணக்கத்துக்கு வாய்ப்பொன்று தோன்றுவதாக நோக்கப்பட்டது.

தவறவிடப்பட்ட பல வாய்ப்புக்கள் தமிழர்களைப் பொறுத்தவரை ஒரேயொரு விடயத்தை தெளிவாக உணர்த்தியது. இனப்பிரச்சினைக்கு தீர்வைக் காண்பதற்கான அரசியல் துணிவாற்றல் இல்லை என்பதே அதுவாகும். நாட்டுப் பிரிவினை யோசனையை தமிழர்கள் கைவிட்டு இப்போது பல வருடங்கள் கடந்துவிட்ட



**மீரா சிறினிவாசன்**

போதிலும் பிரிவினைப் பூச்சாண்டியை சில சிங்கள அரசியல்வாதிகள் இன்னமும் காட்டிக்கொண்டேயிருக்கிறார்கள். அல்லது போரினால் பாதிக்கப்பட்ட பிராந்தியத்தில் பொருளாதார அபிவிருத்தியை ஒரு மாற்று தீர்வாக அவர்கள் முன்வைக்கிறார்கள்.

**இந்திய தலையீடு**

தேசிய இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு ஜனாதிபதி விக்கிரமசிங்க தனக்கு தானே விதித்த காலக்கெடு ஒருமாதத்துக்கு முன்னர் காலாவதியாகிவிட்டது. சில இலங்கையர்கள் தாங்கள் இன்னமும் இரண்டாம்தர குடிமக்களாகவே நடத்தப்படுவதாக உணர்கின்ற போதிலும் 75 வது சுதந்திர தினத்தை அரசாங்கம் பெரும் எடுப்பில் கொண்டாடியது. 13 வது திருத்தத்தை நடைமுறைப்படுத்தப் போவதாக ஜனாதிபதி வழங்கிய உறுதிமொழி ஏற்கெனவே மங்கிப்போய்விட்டது.

பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கான சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவி, கடந்த வருடத்தைய பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தினால் இன்னமும் தொடர்ந்து பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற மக்கள் பிரிவினரின் புதிய ஆர்ப்பாட்ட அலை என்பனவே இலங்கையில் இன்று பிரதான தலைப்புச் செய்திகள். இலங்கையின் கடன்களை மறுசீரமைப்பு செய்வதற்கு சீனா இணங்கியதை அடுத்து நாணய நிதியத்தின் கடனுதவி இலங்கையின் கைக்கு எட்டக் கூடியளவுக்கு அண்மையாக வந்துவிட்டது எனலாம்.

'ஏனைய விவகாரங்கள் எல்லாவற்றுக்கும் முன்னதாக பொருளாதார மீட்சி' என்ற அணுகுமுறையை அரசாங்க ஆதரவாளர்கள் கடைப்பிடிக்கும் நிலையில் நீண்டகாலமாக தீர்வு காணப்படாமல் இருக்கும் இனநெருக்கடியை கையாளுவதில் விரைவில் அக்கறை காண்பிக்கப்படக் கூடியதற்கான அறிகுறியை காணமுடியவில்லை.

இலங்கையின் தமிழ் தேசிய பிரச்சினையில் வரலாற்று ரீதியாக இந்தியா ஒரு பிணக்குத்தீர்க்கும் பங்கை வகித்து வந்திருக்கும் அதேவேளை இந்த பிரச்சினையில் இந்தியாவின் அக்கயையும் செல்வாக்கும் அருகிக்கொண்டே போகிறது என்று தமிழ் அரசியல்வாதிகளிலும் தமிழ்ச் சமூகத்திலும் பலர் கூறுகிறார்கள். இலங்கையில் சீனாவின் செல்வாக்கை தடுப்பதற்கான முயற்சிகளில் தீவிர கவனத்தைச் செலுத்தும் புதுடில்லி 13 வது திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டிய தேவை குறித்து வழமையான அறிக்கைகளை வெளியிடுவதை தவிர வேறு எதையும் அது விடயத்தில் பெரிதாக செய்வதில்லை என்று அவதானிகள் விமர்சகர்கள் கூறுகிறார்கள்.

இத்தகைய நிலைமை இலங்கையின் வடக்கு கிழக்கில் போரினால் பாதிக்கப்பட்ட தமிழ்ச்சமூகத்தை எங்கு கொண்டு போய்விடும்? பல்தசாப்த கால போராட்டங்கள், ஆயுத மோதல்களுக்கு பிறகு இன்னமும் தமிழ் மக்கள் நீதி, சமத்துவம் மற்றும் கௌரவத்தைக் கோருகிறார்கள். அரசியல் தீர்வு நீண்டகாலமாக நழுவிக் கொண்டே செல்கிறது. ●

(த இந்து)

# டிரான் அலஸ்க்கான அழைப்பு விசாரணை செய்வதற்கானதல்ல!

## மனித உரிமை ஆணைக்குழு விளக்கம்



கொழும்பு, மார்ச் 14

பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், விசாரணைக்காக அழைக்கப்படவில்லை என்றும், சில விடயங்களை தெளிவுபடுத்தும் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு மாத்திரமே கோரப்பட்டுள்ளதாகவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழு, ஒவ்வொரு குடிமகனுக்கும் ஒன்று கூடுவதற்கும் கருத்து வெளியிடுவதற்கும் உரிமையுண்டு என்று தெரிவித்துள்ளது.

இந்தநிலையில், தொழிற்சங்கங்கள், தொழில்முறை அமைப்புகள், மாணவர்கள் உட்பட நாட்டில் உள்ள பல்வேறு குழுக்களால் இந்த உரிமை பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இவ்வாறான உரிமைகளைப் பயன்படுத்தும்போது, சட்டத்தை அமுல்படுத்தும் அதிகாரிகள் கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரை பிரயோகங்கள், தடிகள் என்பவற்றை போராட்டத்தில், ஈடுபடுபவர்களை கலைக்கும் பொறிமுறையாக பயன்படுத்துவதாக முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த சூழ்நிலையில், இலங்கையில் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் முக்கிய கண்காணிப்பு அமைப்பாக தமது ஆணைக்குழு, இந்த நிலைமையை, ஆய்வுக்கு உட்படுத்த வேண்டிய ஒன்றாகக் கருதுகிறது என்று மனித உரிமைகள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

(அ)

# காற்றாலைத் திட்டங்களின் திறனை உயர்த்த அதானி குழுமம் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 14

இலங்கையில் 340 மெகாவட் காற்றாலை மின் திட்டங்களை தொடங்க அனுமதி பெற்றுள்ள அதானி குழுமம், அதன் திறனை 500 மெகாவாட்ஸாக உயர்த்துமாறு இலங்கை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த முன்மொழிவு குறித்து பரிசீலிக்கப்பட்டு வருவதாக இலங்கையின் மின்சாரம் மற்றும் எரிசக்தி இராஜாங்க அமைச்சர் டி.வி.சானக்க கூறினார்.

அத்தோடு அனுராதபுரத்தில் இருந்து மதுரை வரை செல்லக் கூடிய மின்சாரம் கடத்தும் பாதைத் திட்டம் ஒன்றை நிர்மாணிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் டி.வி. சானக்க குறிப்பிட்டார்.

இலங்கையில் குறித்த திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் இந்தியாவும் தீவிர ஆர்வம் காட்டி வருகிறது என்றும் அமைச்சர் டி.வி.சானக்க தெரிவித்தார்.

(அ)

# வெல்லம்பிட்டிய பகுதியில் ஒருவரை சுட்டுக்கொல்ல முயன்ற மூவர் கைது!

கொழும்பு, மார்ச் 14

வெல்லம்பிட்டியவில் ஒருவரை சுட்டுக் கொல்ல முயற்சித்த மூவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கொலைக்கு திட்டமிடல் மற்றும் கொலை முயற்சிக்கு உதவிய இருவர் கொடுவில பிரதேசத்தில் கைது செய்யப்பட்டனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

விசாரணையைத் தொடர்ந்து, துப்பாக்கிச் சூடு நடத்த நியமிக்கப்பட்ட மோட்டார் சைக்கிள் ஓட்டி பொமிரியாவில் கைது செய்யப்பட்டார்.

பொரளையில் இருந்து மோட்டார் சைக்கிள் கண்டு பிடிக்கப் ட்டுள்ளதுடன், சந்தேக நபர்கள் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்படவுள்ளனர். (அ)

# போதைப்பொருளுடன் மசிடோனிய பிரஜை கைது!

கொழும்பு, மார்ச் 14

சுமார் இரண்டு கோடி ரூபா பெறுமதியான 350 கிராம் கொக்கெய்னுடன் மசிடோனியப் பிரஜை ஒருவரை பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவினர் நேற்று கைது செய்துள்ளதாக இலங்கை சுங்கப் பிரிவு தெரிவித்துள்ளது.

சந்தேகத்திற்கிடமான நடத்தை காரணமாக பிரேசிலில் இருந்து வந்த மசிடோனியப் பிரஜையை தடுத்து நிறுத்தி சோதனையிட்ட போது, அவரது சூட்கேஸில் கொக்கெய்ன் போதைப் பொருள் சூட்சுமமாக மறைத்து வைத்திருக்கப்பட்டிருந்தமை தெரிய வந்தது.

நான்கு பொட்டலங்களில் கொக்கெய்ன் அடைக்கப்பட்டு சூப் பைக்கெற்றுகள் போன்று பொதி செய்யப்பட்டிருந்ததாக சுங்கப் பிரிவினர் தெரிவித்தனர்.

54 வயதுடைய சந்தேகநபர் இலங்கைக்கு வருவது இதுவே முதல் தடவை எனவும், சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக இலங்கை பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட உள்ளதாகவும் சுங்கப் பிரிவினர் மேலும் கூறினர். (அ)

# விவாகரத்து சார் வழக்குகள் அதிகரிப்பு

கொழும்பு, மார்ச் 14

பெரும்பாலான இலங்கையர்கள் விவாகரத்து மற்றும் பராமரிப்பு வழக்குகளுக்கு சட்ட உதவி கோரியுள்ளனர் என்று இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

2011 முதல் 2021 வரையான 10 ஆண்டுகளில் 9 இலட்சத்து 16 ஆயிரத்து 540 பேருக்கு சட்ட உதவி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 2 0 2 2 ஆம் ஆண்டு மாத்திரம் ஒரு இலட்சத்து 69 ஆயிரத்து 215 பேருக்கு சட்ட ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதுடன் 49 ஆயிரத்து 479 பேர் சட்ட நடவடிக்கைகளுக்கு முகங்கொடுத்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

கல்வி tv CHANNEL-1

**14.03.2023**
**செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

கல்வி tv CHANNEL - 2

**14.03.2023**
**செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# திருமலை காணிப் பிரச்னைகள் விரைவாக தீர்க்கப்படவேண்டும்

## இம்ரான் எம். பி. கோரிக்கை



திருமலை, மார்ச் 14

**திருகோணமலை மாவட்டத்தில் மிகநீண்ட காலமாக காணிப் பிரச்னைகள் காணப்படுவதாகவும், அதில் சில காணிகளுக்கு துறைமுக அதிகார சபையும், தொல்பொருள் திணைக்களமும் உரிமை கோரி வருகின்றனர். அவற்றை தீர்ப்பதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் கேட்டுக்கொண்டார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்- திருகோணமலை மாவட்டத்தில் சீனக்குடாய், கப்பல் துறை, முத்துநகர், சமதங்கபுர, மட்கோ, பூமுகார், சிங்கபுர, வெள்ளைமணல், கருமலையூற்று போன்ற பகுதிகளில் சுமார் 35 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் ஆங்கிலேயர் காலத்திலிருந்து வசித்து வருகிறார்கள். அவர்களுக்கான வாக்களிக்கும் உரிமையும் அங்கேதான் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்நிலைமையில், துறைமுக அதிகார சபை அக்காணிகளுக்கு உரிமை கோருகிறது. இதனை துறைமுக அதிகார சபை தெரிந்து கொள்ளவேண்டும்.

அதுமட்டுமல்லாமல் முத்துநகர் பிரதேசத்தில் அரச வீட்டுத் திட்டங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இந்த பிரதேச மக்கள் வீடுகளை கட்ட முடியாத நிலையும், மின்சாரம், நீர் வசதிகளை பெறமுடியாத நிலையிலும் அபிவிருத்தித் திட்டங்கள் எதுவும் இல்லாமல் பல துன்பங்களையும், துயரங்களையும் அனுபவிக்கின்றார்கள். இப்பிரதேச மக்களுடைய பிரச்னைக்கு உடனடி தீர்வை பெற்றுத்தருமாறு காணி, துறைமுக அமைச்சரிடம் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், குச்சவெளி பிரதேச செயலக பிரிவில் குச்சவெளி பொலிஸ் நிலையத்திற்கு முன்னால் அமைந்துள்ள சுமார் ஒரு ஏக்கர் காணியில் 1970 ஆம் ஆண்டுக்கு முன்பிருந்தே பொதுச் சந்தையொன்று குச்சவெளி பிரதேச சபையின் கட்டுப்பாட்டில் இயங்கி வந்துள்ளது. அதற்கான ஆவணங்களும் காணப்படுகின்றன. எனினும் 1990 ஆம் ஆண்டு யுத்தம் காரணமாக அங்கிருந்த மக்கள் இடம்பெயர்ந்தபோது அச்சந்தையை இனந்தெரியாதோர் சேதப்படுத்தி, கொள்ளையிட்டிருக்கிறார்கள். அண்மையில் இந்த காணியில் குச்சவெளி பிரதேச சபையால் பொதுச்சந்தை அமைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டபோது தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் அந்த நடவடிக்கையை நிறுத்தியிருக்கிறார்கள். இக்காணியை உரிமைகொள்ள தொல்பொருள் திணைக்களத்திடம் எந்த ஆவணங்களும் இல்லை. அந்தக் காணியில் பொதுச்சந்தை அமைப்பதற்கான ஏற்பாடுகளை செய்துதரவேண்டும் எனவும் காணி அமைச்சரிடம் இச்சந்தர்ப்பத்தில் கோரிக்கை விடுக்கிறேன்-என்றார். (அ)

# தென்கிழக்கு பல்கலைக்கழக பதிவாளருக்கு பிரியாவிடை!



அம்பாறை, மார்ச் 14

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் பதிவாளர் எச். அப்துல் சத்தார் ஓய்வுபெற்றுச் செல்லவுள்ள நிலையில் அந்தப் பல்கலைகழகத்தின் சுதந்திர ஊழியர் சங்கம் ஏற்பாடு செய்த பிரியாவிடை நிகழ்வு தொழிலாளர் மேம்பாட்டு நிலையக் கேட்போர் கூடத்தில் சங்கத்தின் தலைவர் முனாஸ் முகைடீன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் கலந்து கொண்டு உரையாற்றினார்.

அதேவேளை கௌரவ அதிதியாக துணைப் பதிவாளர் ஐ.எல்.தஸ்லிம், விஷேட அதிதியாக பதில் நிதியாளர் சி.எம். வன்னியாராச்சி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

சுதந்திர ஊழியர் சங்கத்தின் தலைவர் முனாஸ் முகைடீன் உள்ளிட்ட உயர் சபை உறுப்பினர்களால் மாலையிட்டு வரவேற்கப்பட்ட பதிவாளர் சத்தார், இப் பல்கலைக்கழகத்துக்கு ஆற்றிய உயர் பணிகள் தொடர்பில் சிலாகித்துப் பேசிய நிகழ்வின் தலைவர் மற்றும் பிரதம அதிதி உள்ளிட்ட அதிதிகள் அவர் ஆற் றிய பணிக்காக நன்றி தெரிவித்தனர். (அ)

# முன்பள்ளிக்கு சீருடை



அம்பாறை, மார்ச் 14

காரைதீவு பிளஸ் முன்பள்ளி மாணவர்களுக்கு ஒரு தொகுதி சீருடைகளை காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தனது சொந்த நிதியிலிருந்து வழங்கினார்.

இந்த நிகழ்வு நேற்று முன்தினம் முன்பள்ளி ஆசிரியை கே. ரதி தலைமையில் நடைபெற்றது.

மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளுடன் அங்கு தவிசாளர் ஜெயசிறில் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு இந்த சீருடைகளை வழங்கினர்.

சீருடைகளுக்கென தவிசாளர் தனது சொந்த நிதியிலிருந்து 35 ஆயிரம் ரூபாயை வழங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது. (அ)

# ஜனாதிபதிக்கு நன்றி தெரிவிப்பு

நிந்தவூர், மார்ச் 14

முஸ்லிம் மக்களால் அனுஷ்டிக்கப்படவிருக்கும் புனித நோன்பு காலத்தை முன்னிட்டு பேரீச்சம்பழங்களுக்கு விதிக்கப்பட்டிருந்த விசேட பண்டங்கள் வரியைக் குறைப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளமைக்கு சம்மாந்துறை பிரதேச சபையில் பெரு நன்றி தெரிவிக்கப்பட்டுள்ளது

சம்மாந்துறை பிரதேச சபையின் 60 ஆவது மாதாந்த அமர்வில் உரையாற்றிய ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் ஏ.யூசுப் லெவ்வை, ஜனாதிபதியின் இந்த உத்தரவு தொடர்பில் சபையில் விளக்கி நன்றி தெரிவித்ததுடன்,

இது தொடர்பிலான நன்றிப் பிரேரணை ஒன்றை நிறைவேற்றி ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

உறுப்பினர் யூசுப் லெவ்வை இந்த விடயம் தொடர்பில் சபை அமர்வில் உரையாற்றுகையில் பின்வருமாறு கூறினார்.

முஸ்லிம் மக்கள் அனுஷ்டிக்கும் புனித ரமழான் நோன்பு இம்மாதம் 23 ஆம் திகதி முதல் ஏப்ரல் மாதம் 21 திகதி வரை முன்னெடுக்கப்படவுள்ளது.

இதனிமித்தம் தினமும் நோன்பு திறப்பதற்கான பேரீச்சம் பழங்களுக்கு விதிக்கப்பட்ட விசேட பண்டங்கள் வரியை கிலோ ஒன்றுக்கு 200 ரூபாவிலிருந்து, ஒரு ரூபாவாகக் குறைப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.

அரசாங்கங்கள், நிறுவனங்கள், வணிக நிறுவனங்கள், தொண்டர் அமைப்புக்கள் மற்றும் நலன் விரும்பிகளிடமிருந்து எவ்வித அந்நியச் செலாவணியும் தொடர்புபடாமல் பரிசாக அல்லது நன்கொடையாக அனுப்பப்படும் பேரீச்சம் பழங்களுக்கே இந்த வரிச் சலுகை வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதியின் இந்த நடவடிக்கை முஸ்லிம் மக்களுக்கும், முஸ்லிம்களின் ஐம்பெரும் கடமைகளுள் ஒன்றான ரமழான் நோன்பு அனுஷ்டிப்புக்கும் கௌரமளிக்கும் செயற்பாடாகும்.

எனவே இது விடயத்தில் ஜனாதிபதிக்கு நாம் பெருநன்றி தெரிவிப்பதுடன், சபை மூலம் இந்த நன்றிப்பிரேரணையை ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்குமாறும் கோருகின்றேன்" - என்றார். (அ-06)

# மட்டக்களப்பு சிறைக்கு தேசிய ரீதியில் பெருமை சேர்த்த வீரர்கள் கௌரவிப்பு



மட்டக்களப்பு, மார்ச் 14

மல்யுத்த விளையாட்டில் தேசிய ரீதியில் மட்டக்களப்பு சிறைச்சாலையை தேசிய ரீதியில் முதலிடத்துக்குக் கொண்டு வந்த, மட்டக்களப்பு சிறைச்சாலை உத்தியோகத்தர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு, மட்டக்களப்பு சிறைச்சாலையின் அத்தியட்சகர் ந.பிரபாகரன் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

மட்டக்களப்பு சிறைச்சாலையின் அத்தியட்சகர் ந.பிரபாகரன் தலைமையில் நேற்று முன்தினம் மட்டக்களப்பு சிறைச்சாலை வளாகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் அதிதிகளும், விளையாட்டு வீரர்களும் மலர் மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்பளிக்கப்பட்டதைத் தொடர்ந்து நிகழ்வுகள் ஆரம்பமாகின.

இந்நிகழ்விற்கு சிறப்பு அதிதியாக தேசிய பயிற்றுவிப்பாளரும், சாண்டோ சங்கரதாஸ் விளையாட்டு கழகத்தின் பயிற்றுவிப்பாளரும், இந்து கல்லூரியின் உடற்கல்வி ஆசிரியருமான வே.திருச்செல்வம் கலந்து கொண்டார்.

நிகழ்வில் தேசிய ரீதியில் சாதனை நிலைநாட்டிய வீரர்கள் பதக்கம் அணிவிக்கப்பட்டு, சான்றிதழ், பணப்பரிசு உள்ளிட்ட நினைவுச் சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இச்சாதனையினை படைப்பதற்காக பயிற்சியை வழங்கிய பயிற்றுவிப்பாளர் வே.திருச்செல்வம் சிறைச்சாலை அத்தியட்சகரினால் கௌரமளிக்கப்பட்டதுடன், பணப்பரிசில்களும் வழங்கப்பட்டது. (அ)

# யானை தாக்கி ஒருவர் பலி!

அம்பாறை, மார்ச் 14

மொறவெவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கற்பிட்டிக்குளம் பகுதியில் யானை தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ள சம்பவம் நேற்று முன் தினம் காலை இடம்பெற்றது.

இவ்வாறு உயிரிழந்தவர் வில்கம்விகார பகுதியைச் சேர்ந்த 53 வயதான எம்.இ.ஏ. விதானலகே ஹரிச்சந்திர என அடையாளம் காணப்பட்டார்.

இச்சம்வம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மொறாவெவ பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)



# பாக்முட் பிரதேசத்தில் கடும் போர் மூண்டது!

## பெரும் இழப்புகள் பதிவானதாக தகவல்

கீவ், மார்ச் 14

உக்ரைனும் ரஷ்யாவும் கிழக்கு உக்ரைனிய நகரமான பாக்முட்டில், பெரும் இழப்புகளை சந்தித்துள்ளதாக அறிவித்துள்ளன.

கடந்த சில நாட்களில் ரஷ்யப் படைகள் 1,100க்கும் மேற்பட்ட உயிரிழப்புகளைச் சந்தித்துள்ளதாகவும் பலர் படுகாயமடைந்துள்ளதாகவும் உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஸெலென்ஸ்கி தெரிவித்தார்.

அதேவேளை, கடந்த 24 மணி நேரத்தில் 220க்கும் மேற்பட்ட உக்ரைன் சேவை உறுப்பினர்களை கொன்றுள்ளதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

பாக்முட்டில் போர் தீவிரமடைந்து வருவதால் இழப்புகள் தொடர்பான சரியான எண்ணிக்கையை பெற்றுக்கொள்ள முடியவில்லை எனக் கூறப்படுகின்றது.

ரஷ்யா மற்றும் அதன் பிரிவினைவாத கூட்டாளிகளின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள உக்ரைனின் டொனெட்ஸ்க் பகுதியில் உள்ள பாக்முட்டில், ஒரு வருடத்திற்கு முன்பு ரஷ்யா உக்ரைனை ஆக்கிரமித்ததில் இருந்து அங்கு சில கடுமையான சண்டைகள் நடந்துள்ளன.

கடந்த இலையுதிர்காலத்தில் ரஷ்யா சட்டவிரோதமாக இணைக்கப்பட்ட நான்கு மாகாணங்களில் ஒன்றான டொனெட்ஸ்க் மாகாணத்தில் பக்முட் அமைந்துள்ளது. ரஷ்யா டொனெட்ஸ்க் மாகாணத்தின் பாதியைக் கட்டுப்படுத்துகிறது. அந்த மாகாணத்தின் மீதமுள்ள பாதியைக் கைப்பற்ற, ரஷ்யப் படைகள் பாக்முட் வழியாகச் செல்லவேண்டும்.

இதுவரை பாக்முட் நகரம் உக்ரைன் படையினரின் கட்டுப்பாட்டில்தான் உள்ளது. ஆனால், தேவைப்படும் போது அந்த நகரிலிருந்து இராணுவம் வெளியேறும் என உக்ரைனிய ஜனாதிபதி வோலோடிமிர் ஸெலென்ஸ்கியின் பொருளாதார ஆலோசகரான அலெக்சாண்டர் ரோட்னியன்ஸ்கி முன்னதாக கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# பங்களாதேஷ் ரோஹிங்கியா முகாம் தீ விபத்து திட்டமிட்ட நாசவேலையே!

டாக்கா, மார்ச் 14

பங்களாதேஷ் முகாம்களில் ஆயிரக்கணக்கான ரோஹிங்கியா முஸ்லிம்களை வீடற்றவர்களாக மாற்றிய தீ விபத்து திட்டமிட்ட நாசவேலை என்று சம்பவத்தை விசாரிக்கும் குழு கூறியது.

கிட்டத்தட்ட 2,800 தங்குமிடங்கள் மற்றும் மருத்துவமனைகள் மற்றும் கற்றல் மையங்கள் உட்பட 90 இற்கும் மேற்பட்ட வசதிகள் மார்ச் 5 அன்று தீயில் அழிக்கப்பட்டன. 12,000 க்கும் மேற்பட்ட மக்கள் தங்குமிடமின்றி உள்ளனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

1 மில்லியனுக்கும் அதிகமான ரோஹிங்கியா அகதிகள் மூங்கில் மற்றும் மெல்லிய பிளாஸ்ரிக் தாள்களால் ஆன பல்லாயிரக்கணக்கான குடிசைகளில் வாழ்கின்றனர். பெரும்பாலானோர் 2017 இல் மியான்மரில் இராணுவத் தலைமையிலான ஒடுக்குமுறையிலிருந்து தப்பி ஓடிய எல்லை மாவட்டமான காக்ஸ் பஜாரில் உள்ள முகாம்களில் உள்ளனர்.

தீ விபத்து ஒரு திட்டமிட்ட நாசவேலையாகும் என்று ஏழு பேர் கொண்ட விசாரணைக் குழுவின் தலைவரான மூத்த மாவட்ட அரசாங்க அதிகாரி அபு சுபியன் காக்ஸ் பஜாரில் இருந்து தொலைபேசியில் ரொய்ட்டர்ஸிடம் தெரிவித்தார்.

ஒரே நேரத்தில் பல இடங்களில் தீப்பிடித்தது, இது திட்டமிட்ட செயல் என்பதை நிரூபித்த அவர், இது தீவிரவாத குழுக்களால் முகாம்களுக்குள் மேலாதிக்கத்தை நிலைநிறுத்த திட்டமிட்ட முயற்சி என்றும் கூறினார்.

சம்பவத்தின் பின்னணியில் உள்ள குழுக்களை அடையாளம் காண சட்ட அமலாக்க முகமையால் மேலும் விசாரணையை நாங்கள் பரிந்துரைத்தோம் என்று அவர் கூறினார்.

ரோஹிங்கியா முகாம்களுக்கு தனி தீயணைப்பு சேவை பிரிவு அமைக்கவும் குழு பரிந்துரைத்தது. (அ)

# மெக்சிக்கோவில் துப்பாக்கிச் சூடு!

மெக்சிக்கோசிற்றி, மார்ச் 14

மெக்சிக்கோவின் மத்திய மாகாணத்திலுள்ள மதுபான விடுதி ஒன்றில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் 10 பேர் உயிரிழந்துள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டில் மேலும் 5 பேர் காயமடைந்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மதுபான விடுதிக்குள் நுழைந்த ஆயுதம் ஏந்திய கும்பல், அதன் ஊழியர்கள் மற்றும் மது அருந்திக் கொண்டிருந்தவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளது.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தவர்களில் 07 ஆண்களும் 3 பெண்களும் அடங்குவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)





# பாரிஸ் தெருக்களில் தொன் கணக்கில் கழிவுகள் தேக்கம்

## தொழிலாளர் போராட்டம் அகற்றும் பணி நிறுத்தம் நகரில் சுகாதாரச் சீர்கேடு

பாரிஸ், மார்ச் 14

ஓய்வூதியச் சீர்திருத்தத்துக்கு எதிரான வேலை நிறுத்தத்தால் பாரிஸ் நகரின் குப்பைக் கழிவு அகற்றும் பணிகள் கடந்த ஐந்து, ஆறு நாட்களாகத் தடைப்பட்டிருக்கின்றன. இதனால் நகர வீதிகளில் தொன் கணக்கில் கழிவுகள் நிறைந்து காணப்படுகின்றன.

ஐயாயிரம் தொன்களுக்கும் அதிகமான கழிவுகள் அகற்றப்படாமல் தேங்கியுள்ளன என்று மாநகர நிர்வாகம் தெரிவித்துள்ளது. அதனால் சில தெருக்களில் துர்நாற்றம் வீசுகிறது. சுகாதாரத்துக்குப் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. நடைபாதைப் பயணத்துக்கும் பெரும் இடைஞ்சல் ஏற்பட்டுள்ளது.

பாரிஸ் நகரில் குடியிருப்பாளர்களால் தினமும் வெளியேற்றப்படுகின்ற கழிவுகள் வாகனங்கள் மூலம் அகற்றப்பட்டு கழிவு தரம்பிரிக்கும் மையங்களுக்குக் கொண்டு செல்லப்படுவது வழக்கம். அவ்வாறு கழிவு அகற்றும் பணியில் ஈடுபடுகின்ற மாநகரத் தொழிலாளர்களின் தொழிற் சங்கமும் தற்போதைய வேலை நிறுத்தப் போராட்டத்தில் இணைந்துள்ளது. அதனால் கழிவு அகற்றும் பணியாளர்களில் சுமார் அறுபது வீதமானோர் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

நகரின் வீதி ஓரங்கள் குப்பைக் கொள்கலன்களால் நிறைந்து காணப்படுகின்றன. கொள்கலன்கள் நிறைந்து வழிகின்றன. வெளியே தரையெங்கும் கழிவுப் பொதிகள்

குவிக்கப்பட்டு வருகின்றன. கடும் காற்றின் காரணமாகக் குப்பைகள் வீதிகள் எங்கும் பறந்து சிதறுண்டு காணப்படுகின்றன.

ஓய்வுபெறுகின்ற வயதை 64 ஆக அதிகரிப்பது உட்பட சட்டத்தில் சீர்திருத்தங்கள் செய்யப்படுவதற்கு எதிரான போராட்டங்கள் நாடெங்கும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

கடந்த சனிக் கிழமை நடைபெற்ற பேரணிகளில் இதற்கு முன்னர் போலன்றி மக்கள் எண்ணிக்கை குறைந்திருப்பதாக மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன. தற்சமயம் நிலவிவருகின்ற குளிர் காற்றுடன் கூடிய மழைக் காலநிலையே இந்த வீழ்ச்சிக்குக் காரணம் என்று கூறப்படுகிறது. கடந்த சனிக்கிழமை இரவு நடைபெற்ற விவாதங்களுக்குப் பின்னர் புதிய ஓய்வூதியச் சட்ட நகலை நாட்டின் செனற் சபை உறுப்பினர்கள் ஏற்றுக் கொண்டு வாக்களித்துள்ளனர்.

அது அடுத்த வாரம் பாராளுமன்றத்தில் இறுதி வாக்கெடுப்புக்கு விடப்படவுள்ளது. இதனால் தொழிற்சங்கங்கள் சீற்றமடைந்துள்ளன. பரபரப்பான நிலைமை தோன்றியுள்ளது. (அ)

# நீர்மூழ்கிக் கப்பலில் இருந்து நேற்று வடகொரியா ஏவுகணை சோதனை!

பியொங்யாங், மார்ச் 14

வட கொரியா தனது கிழக்கு கடற்கரையில் நீர்மூழ் கிக் கப்பலில் இருந்து இரண்டு ஏவுகணைகளைச் சோதனை செய்ததாகக் கூறியுள்ளது.

அமெரிக்க மற்றும் தென் கொரிய இராணுவங்கள் பெரிய அளவிலான கூட்டு இராணுவ பயிற்சிகளை தொடங்குவதற்கு ஒரு நாள் முன்னதாக ஞாயிற்றுக் கிழமை சோதனை நடந்துள்ளது.

ஏவுகணை ஏவுதல்கள் ஆயுத அமைப்பின் நம்பகத் தன்மையை உறுதிப்படுத்தவும், நாட்டின் நீர்மூழ்கிக் கப்பல் பிரிவுகளின் நீருக்கடியில் இருந்து மேற்பரப்பு தாக்குதல் நடவடிக்கைகளை அளவிடுவதாகவும் சோதனை நடத்தப்பட்டதாக அதிகாரபூர்வ கொரிய மத்திய செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஏவுகணைச் சோதனைகள், "அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகள் மற்றும் தென் கொரிய கைப்பாவை படைக ளுக்கு அதிக சக்தி வாய்ந்த சக்திகளுடன் பதிலடி கொடுக்கும் வடகொரியாவின் தீர்மானத்தை



காட்டுகின்றன" என்று செய்தி நிறுவனம் கூறியது.

அணு ஆயுத ஏவுகணைகளை நீர்மூழ்கிக் கப்பல்களில் இருந்து செலுத்தும் திறனைப் பெறுவதற்கு வட கொரியா பல ஆண்டுகளாக கடுமையாக உழைத்து வருகிறது. இது அமெரிக்க நிலப்பகுதியை அடையும் திறன் கொண்ட பல்வேறு ஆயுதங்களை உள்ளடக்கிய ஒரு ஆயுதக் களஞ்சியத்தின் அடுத்த முக்கிய பகுதி.

முன்னதாக, தென் கொரியாவின் இராணுவம் ஞாயிற்றுக்கிழமை வடக்கின் கிழக்கு துறைமுக நகரமான சின்போவுக்கு அருகிலுள்ள கடலில் நீர்மூழ்கிக் கப்பலில் இருந்து ஏவப்பட்டதைக் கண்டறிந்ததாகக் கூறியது.

தென் கொரியா மற்றும் அமெரிக்க உளவுத்துறை அதிகாரிகள் இந்த நடவடிக்கையின் விவரங்களை ஆய்வு செய்து வருவதாக தென் கொரியாவின் கூட்டுப் படைத் தலைவர்கள் தெரிவித்தனர். (அ)

# இலங்கையின் கனவை தகர்த்து நியூசிலாந்து அணி அபார வெற்றி!



கிறிஸ்ட்சேர்ச், மார்ச் 14

இலங்கை அணியை 2 விக்கெட் களால் நியூசிலாந்து வெற்றி கொண் டது. இதன் மூலம் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் விளையாடும் இலங்கையின் கனவு நியூசிலாந்து தகர்த்தது. இதனால், இறுதிப் போட்டியில் அவுஸ்திரேலியாவை இந்தியா எதிர்கொள்கிறது.

இலங்கை - நியூசிலாந்து டெஸ்ட் தொடரின் முதல் போட்டி கிறிஸ்ட்சேர்ச்சில் நடந்தது.

மிகவும் பரபரப்பாக நடந்த இந்தப் போட்டியில், கடைசிப் பந்தில் நியூசிலாந்து 2 விக்கெட்களால் வெற்றி பெற்றது.

மழை காரணமாக போட்டியின் கடைசி நாளான நேற்று, 5 மணிநேர தாமதத்தின் பின்னர் போட்டி ஆரம் பமானது. அப்போது நியூசிலாந்தின் வெற்றிக்கு 42 ஓவர்களில் மேலும் 257 ஓட்டங்கள் தேவைப்பட்டன.

முன்னாள் அணித் தலைவர் கேன் வில்லியம்சன் குவித்த ஆட்டமிழக்காத அபார சதமும் டரில் மிற்செல் பெற்ற அரைச்சதமும் நியூசிலாந்தின் வெற்றிக்கு வழி வகுத்தன. ஆனால், அந்த வெற்றி இலகுவாக வந்து விடவில்லை. கடைசிவரை போராடி இலங்கை கடைசி பந்தில் தோல்வி அடைந்தது.

கேன் வில்லியம்சன் 33 ஓட்டங்கள் பெற்றிருந்தபோது கொடுத்த சற்று கடினமான பிடியை விக்கெட் காப்பா ளர் நிரோஷன் டிக்வெல்ல தவற விட்டமையும் சுழல் பந்துவீச்சாளர் அநாவசியமாக கொடுத்த 4 அகல பந்து களும் இலங்கையின் தோல்விக்கு பிரதான காரணமாகின.

இதனிடையே, கிறிஸ்ட்சேர்ச்சில் மிகப் பெரிய வெற்றி இலக்கை நியூசி லாந்து அடைந்து புதிய மைல்கல்லை எட்டியது. போட்டியின் கடைசி நாளான நேற்று, ஒரு விக்கெட் இழப் புக்கு 28 ஓட்டங்கள் என்ற நிலையில் நியூசிலாந்து ஆட்டத்தைத் தொடங் கியது. 2 விக்கெட்களை இழந்த போது அணியின் மொத்த ஓட்ட எண்ணிக்கை 90 ஆகும்.

இந் நிலையில் முன்னாள் தலைவர் கேன் வில்லியம்சன், டரில் மிச்செல் ஆகிய இருவரும் 4ஆவது விக்கெட் டுக்காக 142 ஓட்டங்களைப் பகிர்ந்து நியூசிலாந்துக்கு நம்பிக்கை ஊட்டி னர். மொத்த எண்ணிக்கை 232 ஓட்டங்களாக இருந்தபோது டரில் மிற்செல் 81 ஓட்டங்களுடன் ஆட் டம் இழந்தார். அவரைத் தொடர்ந்து மேலும் 4 விக்கெட்கள் சீரான இடை வெளியில் வீழ்ந்தன. (280 - 8 விக்.)

ஆனால், கேன் வில்லியம்சன் கடைசி ஓவரில் அடித்த பௌண்ட்ரியும் கடைசிப் பந்தில் பெற்ற உதிரி ஓட்ட மும் நியூசிலாந்தை வெற்றி பெறவைத்தது. கேன் வில்லி யம்சன் 121 ஓட்டங்களுடன் ஆட்டம் இழக்காதிருந் தார்.

முன்னதாக இலங்கை தனது முதல் இன்னிங்ஸில், 355 ஓட்டங்களைப் பெற்றது. இதில் குசல் மெண்டிஸ் 87, திமுத் கருணாரட்ன 50, அஞ்சலோ மத்தியூஸ் 47, தனஞ்சய டி சில்வா 46 ஓட்டங்களைப் பெற்றனர்.

நியூசிலாந்து தனது முதல் இன்னிங்ஸில், 373 ஓட்டங் களை பெற்றது. டரில் மிற்செல் 102, மட் ஹென்றி 72, ரொம் லதாம் 67 ஓட்டங்களைப் பெற்றனர்.

இலங்கை இரண்டாவது இன்னிங்ஸில் 302 ஓட்டங் களைப் பெற்றது. அஞ்சலோ மத்தியூஸ் 115, ஆட்ட மிழக்கமல் - தனஞ்சய டி சில்வா 47, தினேஷ் சந்திமால் 42 ஓட்டங்களைப் பெற்றனர்.

நியூசிலாந்து 285 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்களை இழந்தது. கேன் ஆட்டமிழக்கமல் வில்லியம்சன் 121, டரில் மிற்செல் 81 ஓட்டங்களைப் பெற்றனர். (ஐ)




# உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தகுதி பெற்றது இந்தியா!

டுபாய், மார்ச் 14

கிரிக்கெட்டில் (ஆடவர்) 20 வருடங்கள் கழித்து ஐ. சி. சியின் இறுதிப் போட்டி ஒன்றில் இந்தியா - அவுஸ்தி ரேலிய அணிகள் மோதவுள்ளன.

இலங்கைக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியை பரபரப்பான முறையில் நியூசிலாந்து அணி வென்றது. இதையடுத்து உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் போட்டி யின் இறுதிச்சுற்றுக்கு இந்தியா தகுதி பெற்றது.

ஜூன் 7 முதல் 11ஆம் திகதி வரை லண்டன் ஓவல் மைதானத்தில் நடைபெறும் உலக டெஸ்ட் சம்பியன்ஷ ிப் போட்டியின் இறுதிச்சுற்றில் இந்தியா - அவுஸ்திரே லியா அணிகள் மோதவுள்ளன.

2003இல் தென்னாபிரிக்காவில் ஒருநாள் உலகக் கிண்ண இறுதிச்சுற்றில் இந்தியா - அவுஸ்திரேலியா அணிகள் மோதின. இதில் அவுஸ்திரேலிய வெற்றி பெற்று கிண்ணத்தை கைப்பற்றியது.

இந்தியாவும் அவுஸ்திரேலியாவும் ஐ. சி. சி.யின் இறுதிப் போட்டியில் மோதுவதற்கான வாய்ப்பு கிடைத்துள்ளது. கடந்தமுறை இறுதிச்சுற்றில் நியூசி லாந்திடம் இந்தியா தோற்றிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இங்கிலாந்துடனான தொடர் பங்களாதேஷ் அணி வசம்!

டாக்கா, மார்ச் 14

பங்களாதேஷ், இங்கிலாந்து அணிகள் இடையிலான 2ஆவது இருபது - 20 போட்டி நேற்றுமுன்தினம் நடை பெற்றது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி, பங்களாதேஷின் பந்துவீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் விக்கெட்களை இழந்து தடுமாறியது.

இங்கிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் 117 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. இந்த அணியின் சால்ட் 25 ஓட்டங்களும் டக்கட் 28 ஓட்டங்களும் எடுத்தனர்.

பங்களாதேஷ் அணியின் மெஹிதி ஹசன் 4 விக்கெட் களை வீழ்த்தினார்.

இதையடுத்து, 118 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் பங்களாதேஷ் களம் இறங்கியது. தொடக்கத்தில் விக்கெட்களை இழந்து தடுமாறினா லும், அந்த அணியின் ஷாண்டோ நிலைத்து நின்று ஆடி அணியை வெற்றிப்பாதைக்கு கொண்டு சென்றார்.

இறுதியில், பங்களாதேஷ் அணி 18.5 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்து 120 ஓட்டங்கள் எடுத்து இங்கி லாந்தை வீழ்த்தி வெற்றி பெற்றது. அத்துடன், 3 போட்டி கள் கொண்ட இருபது -20 தொடரில் தற்போது 2-0 என்ற கணக்கில் பங்களாதேஷ் முன்னிலையில் உள்ளது. இரு அணிகள் இடையிலான 3ஆவது மற்றும் கடைசி இருபது -20 போட்டி இன்று நடைபெறவுள்ளது.





இந்தியா - ஆஸி. டெஸ்ட்

# 4ஆவது போட்டி சமநிலை; தொடர் இந்தியா வசம்!

அஹமதாபாத், மார்ச் 14

அஹமதாபாத்தில் இந்தியா - அவுஸ்திரேலிய அணி கள் மோதிய நான்காவது போட்டி சமநிலையில் முடி வடைந்தது. இதனால், 2 - 1 என்ற கணக்கில் இந்திய அணி கைப்பற்றியது.

போர்டர் - கவாஸ்கர் கிண்ணத்துக்காக அவுஸ்தி ரேலியா - இந்திய அணிகள் 4 போட்டிகள் டெஸ்ட் தொடரில் மோதின. இதில், மூன்று போட்டிகளின் முடி வில் 2 - 1 என்று இந்தியா முன்னிலையில் இருந்தது.

இந்த நிலையில் நான்காவது டெஸ்ட் அஹமதா பாத்தில் வியாழனன்று தொடங்கியது. அவுஸ்திரேலிய அணி முதல் இன்னிங்ஸில் 167.2 ஓவர்களில் 480 ஓட் டங்கள் எடுத்தது. கவாஜா 180, கிரீன் 114 ஓட்டங்கள் எடுத்தார்கள். அஸ்வின் 6 விக்கெட்களை வீழ்த்தினார்.

இந்திய அணி முதல் இன்னிங்ஸில் 571 ஓட்டங்கள் எடுத்தது. விராட் கோலி 186, /ப்மன் கில் 128 அக்ஷர் படேல் 79 ஓட்டங்கள் எடுத்தார்கள். அவுஸ்திரேலிய அணி 2ஆவது இன்னிங்ஸை நேற்றும் தொடர்ந்தது.

போட்டியின் இறுதிநாளான நேற்று உணவு இடை வேளையின்போது அவுஸ்திரேலிய அணி, 36 ஓவர்களில் ஒரு விக்கெட் இழப்புக்கு 73 ஓட்டங்கள் எடுத்தது. குனமன் 6 ஓட்டங்களில் அஸ்வின் பந்தில் எல். பி. டபிள்யூ ஆனார். எனினும், டி. ஆர். எஸ். முறையீடு செய்யாமல் கிளம்பினார். ஆனால், மீள்பார்வையில் அது ஆட்டமிழப்பு இல்லை எனத் தெரிந்தது. ஹெட் 45, லபுஷேன் 22 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார்கள்.

அதன்பிறகும் நன்கு விளையாடிய டிராவிஸ் ஹெட், 90 ஓட்டங்களில் அக்ஷர் பட்டேல் பந்தில் ஆட்டமிழந் தார். அவுஸ்திரேலிய அணி 78.1 ஓவர்களில் 2 விக்கெட் இழப்புக்கு 175 ஓட்டங்கள் எடுத்தபோது இன்னிங்ஸை இடைநிறுத்தியது. லபுஷேன் 63, ஸ்மித் 10 ஓட்டங்களு டன் ஆட்டமிழக்காமல் இருந்தார்கள். இதையடுத்து 4ஆவது டெஸ்ட் போட்டியை இரு அணிகளும் சமன் செய்தன.

இந்திய அணி 2 - 1 என்று தொடரை கைப்பற்றியது. (ஐ)

# விராட் கோலி 75ஆவது சதம்!



அஹமதாபாத், மார்ச் 14

ஆஸி. - இந்திய அணிகளின் நான்காவது டெஸ்ட் போட்டி சமநிலையில் முடிவடைந்தது. இந்தப் போட்டியில் முதல் இன்னிங்ஸில் விராட் கோலி சதம் அடித்து அசத்தினார். இதன் மூலம் சர்வதேச கிரிக் கெட்டில் 75ஆவது சதத்தை கோலி தொட்டார்.

மூன்று ஆண்டுகளின் பின்னர் கோலி (186 ஓட் டங்கள்) அடித்த டெஸ்ட் சதம் இதுவாகும். இதன் மூலம் அவர் டெஸ்ட் கிரிக்கெட்டில் 28ஆவது சதத் தைப் பூர்த்தி செய்தார்.

விராட் கோலி, 15 பௌண்ட்ரிகளுடன் 364 பந்து களில் 186 ஓட்டங்களை விளாசினார். இது சர்வதேச கிரிக்கெட்டில் அவரின் 75ஆவது சதமாகவும் அமைந்தது.

# ராஜபக்ஷக்களின் ஒன்றிணைவை புறக்கணித்ததா மகிந்த குடும்பம்?

கொழும்பு, மார்ச் 14

**ராஜபக்ஷ குடும்பத்தினரை மீளஒருங்கிணைக்கும் விருந்தை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குடும்பம் முற்றாக புறக்கணித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இது தொடர்பாக சிங்கள வார ஏடு ஒன்றில் வெளியான செய்தியில் - ராஜபக்ஷ குடும்பத்தைச் சேர்ந்த பலர் திடீரென கடந்த வாரம் ஒரே மேசையில் ஒன்றாக இருக்கும் ஒளிப்படம் ஊடகங்களில் வெளியாகி இருந்தது.**



ராஜபக்ஷ குடும்பத்துக்கு இடையே கடும் அரசியல் கருத்து வேறுபாடுகள் இருப்பதாக உள்நாட்டில் கருத்து நிலவி வருவதால், ராஜபக்ஷ குடும்பம் மீண்டும் இணைந்த ஒளிப்படம் வெளியாகிய உடனேயே, ராஜபக்ஷ குடும்ப உறுப்பினர்கள் மீண்டும் ஒன்றிணைந்து புதிய அரசியல் பயணம் தொடங்கினார்களா என்று பலரும் அறியத் தொடங்கினர்.

ராஜபக்ஷ குடும்பத்தை மீண்டும் இணைக்கும் நடவடிக்கைகளை சமீபத்தில் வெளிநாட்டில் இருந்து இலங்கை திரும்பிய ராஜபக்ஷ குடும்பத்தின் சகோதரி ஒருவரும், அவரது கணவரும் மேற்கொண்டனர் என தெரியவந்தது.

இதனை ராஜபக்ஷ குடும்பத்தின் மீள் ஒருங்கிணைவு என்று அறிமுகப்படுத்தியிருந்தனர். அதற்காக ராஜபக்ஷ குடும்பத்தினர் அனைவரையும் கொழும்பில் உள்ள அவர்களது தனிப்பட்ட வீட்டில் இரவு விருந்துக்கு அழைக்க ஏற்பாடு செய்திருந்தனர். அதற்காக, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் அவரது மனைவி, மகிந்த ராஜபக்ஷவின் குடும்பத்தினர், பசில் மற்றும் சமல் குடும்பத்தினர் அனைவரையும் அழைக்க நடவடிக்கை எடுத்துள்ளனர்.

எனினும் இந்த இரவு விருந்துக்கு அனைவரும் வருகை தர சம்மதம் தெரிவித்திருந்தபோதிலும் கடைசி நிமிடத்தில் இடையூறு ஏற்பட்டதையே காண முடிந்தது. அதற்கு காரணம் திடீரென மகிந்த, ஷிரந்தி, நாமல் ஆகியோர் தங்காலை மஹகெதரவுக்குப் புறப்பட்டுச் சென்றுவிட்டனர். இது தற்செயல் நிகழ்வாகத் தோன்றினாலும், ஷிரந்தி மற்றும் நாமலின் வற்புறுத்தலினால் மகிந்த இந்த விருந்தில் பங்கேற்கவில்லை என்றும் தங்காலைக்கு புறப்பட்டுச் சென்றுள்ளார் என்றும் அரசியல் வட்டாரத்தில் பேசப்பட்டது.

அதன்படி மகிந்த, ஷிரந்தி, நாமல் இல்லாமலேயே இரவு விருந்தும் இடம்பெற்றது. எவ்வாறாயினும், இராப்போசன விருந்தில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் அவரது மனைவி திருமதி அயோமா ராஜபக்ஷவும் பங்கேற்றமையை காண முடிந்தது.

ராஜபக்ஷ குடும்பத்தை மீண்டும் இணைக்கும் முதல் முயற்சி பின்னடைவைச் சந்தித்தாலும், ராஜபக்ஷ குடும்பத்தின் சகோதரியும் அவரது கணவரும் அந்த முயற்சியை கைவிடவில்லை. அதன்படி மகிந்த, ஷிரந்தி, நாமல் ஆகியோர் தங்காலையில் இருந்து கொழும்பு திரும்பிய பின்னர் மீண்டும் ஒருமுறை ராஜபக்ஷ குடும்பத்தினருக்கு தனது வீட்டில் இரவு விருந்தளிக்கத் திட்டமிட்டார்.

அதற்கு முன்னைய முறை போன்று அனைத்து ராஜபக்ஷக்களையும் அழைப்பதற்கும் நடவடிக்கை எடுத்தார். இதன் விளைவாக சில காலங்களுக்குப் பிறகு ராஜபக்ஷ குடும்பத்தின் மூத்தவர்கள் அனைவரும் ஒரே மேசையில் ஒன்றாகச் சேர்ந்து உணவை உண்டு மகிழும் வாய்ப்பு மீண்டும் ஒருமுறை கிடைத்தது.

மகிந்த, சமல், பசில், நாமல், ஷசீந்திர ஆகியோர் முன்னிலையில் இருந்த நிலையில், கோட்டா மற்றும் அயோமா ஆகியோர் மாத்திரம் மேசையில் இருக்கவில்லை. ஆனால், இரவு விருந்தின் போது கோட்டாவின் செயலைக் கடுமையாக விமர்சிக்க ராஜபக்ஷ குடும்பத்தைச் சேர்ந்த சிலர் நடவடிக்கை எடுத்ததால், ராஜபக்ஷ குடும்பத்துக்குள் கோட்டாவுக்கு இருந்த எதிர்ப்பு வெளியே தெரிய வந்தது.

பிரதமர் பதவியை மகிந்தவுக்கு விட்டுக்கொடுக்குமாறு பிரதமர் தினேஷ் குணவர்த்தனவிடம் பல தடவைகள் கேட்டுக் கொண்ட போதும், அவர் அதற்கு சாதகமான பதிலை வழங்காதமையால் மீண்டும் அவரிடம் பிரதமர் பதவியை மகிந்தவுக்கு விட்டுக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்வது என இந்த விருந்து நிகழ்வில் ராஜபக்ஷ குடும்பத்தினர் முடிவு

# 500 மில்லியன் டொலர்கள் கடந்த வாரம் சந்தைக்கு!

கொழும்பு, மார்ச் 14

கடந்த ஏழு நாட்களுக்குள் சுமார் 500 மில்லியன் அமெரிக்க டொலர்கள் சந்தைக்கு வந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் நேற்று முன்தினம் கொழும்பில் ஏற்பாடு செய்திருந்த மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கைவசம் வைத்திருக்கும் டொலர்களை ரூபாயாக மாற்றுவதற்கு பொதுமன்னிப்புக் காலம் அறிவிக்கப்பட் டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பொது மன்னிப்புக் காலத்தின் போது டொலர் 365 மற்றும் 370க்கு இடையில் வர்த்தகம் செய்யப்பட்ட போதிலும், 30 மில்லியன் டொலர்கள் மாத்திரமே சந்தைக்கு வந்தன. கறுப்புச் சந்தையில் வர்த்தகத்தில் ஈடுபடும் நபர்கள் மத்திய வங்கியின் ஆலோசனைக்கு செவிசாய்த்திருந்தால், அவர்கள் தங்கள் டொலர்களுக்கு அதிக விலையைப் பெற்றிருப்பார்கள். எவ்வாறாயினும், ரூபாயின் பெறுமதி உயர்வடைய ஆரம்பித்ததில் இருந்து, சுமார் 500 மில்லியன் அமெரிக்க டொலர்கள் சந்தைக்கு வந்துள்ளதாக ஆளுநர தெரிவித்தார். (அ)

# தடம் புரண்டது யாழ்தேவி!

கொழும்பு, மார்ச் 14



கொழும்பு கோட்டையில் இருந்து அனுராதபுரம் நோக்கி பயணித்த யாழ் தேவி விரைவு ரயில் ஒறுகொடவத்த ரயில் பாலத்துக்கு அருகில் தடம் புரண்டது.

இரண்டு ரயில் பெட்டிகள் தடம் புரண்டதாக ரயில் பிரதான கட்டுப்பாட்டு அறை தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக பிரதான மார்க்கத்தில் இயங்கும் ரயில் சேவை தடைப்பட்டுள்ளதாக பிரதான கட்டுப்பாட்டு அறை தெரிவித்துள்ளது.

இதற்கமைய கொழும்பு நோக்கி வரும் சில ரயில்களில் சில தாமதங்கள் ஏற்படக்கூடும் என தெரிவிக்கப்பட்டது.

தடம் புரண்ட யாழ்தேவி ரயிலை வழமைக்கு கொண்டு வரும் பணி ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ரயில் பிரதான கட்டுப்பாட்டு அறை தெரிவித்தது. (அ)

# நான்கு நூல்களின் அறிமுகமும் நாடக நிகழ்வும் விசுவமடுவில்

முல்லைத்தீவு, மார்ச் 14

விசுவமடு மத்திய சனசமூக நிலையத்துடன் காலையடி மறுமலர்ச்சி மன்றம் இணைந்து நடத்தும் நான்கு நூல்களின் அறிமுகமும் நாடக நிகழ்வும் எதிர்வரும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 3 மணியளவில் விசுவமடு மத்திய சனசமூக நிலைய பிரதான மண்டபத்தில் பிரபல கவிஞரும் ஆய்வாளருமான சி. கருணாகரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் நூல் அறிமுக உரைகள் வரிசையில் புதுக்குடியிருப்பைச் சேர்ந்த பிரபல எழுத்தாளர் அலெக்ஸ் பரந்தாமனின் நான்காவது சிறுகதைத் தொகுதியான பறையொலி தொடர்பாக இளம் கவிஞர் வி.அபிவர்ணாவும், பிரபல நாடக ஆசிரியரும் நெறியாளருமான பு.கணேசராஜா வின் பொறுப்பது உன் விதியோ? நாடக எழுத்துருக்களின் தொகுதி பற்றி பிரபல எழுத்தாளர் யோ.புரட்சியும், அழ.பகீரதனால் தொகுக்கப்பட்ட மறுமலர்ச்சி சிறுகதைத் தொகுப்பு பற்றி கவிஞரும் ஆசிரியருமான த.செல்வாவும் , யோ.புரட்சியின் சேதி சொல்லும் சின்னப் பாட்டு சிறுவர் பாடல்களின் தொகுப்பு தொடர்பாக எழுத்தாளரும் அறிவிப்பாளருமான கலாபூஷணம் ந.இராமநாதனும் (கோகுலன்) உரையாற்றவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து சண் நாடகக் குழுவினரின் தயாரிப்பில் பு.கணேசராஜாவின் நெறியாள்கையில் உருவான அரோகரா (ஓராள் அரங்கு) மற்றும் காதலுக்கு மருந்து ஆகிய நகைச்சுவை நாடகங்களும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் இந் நிகழ்வில் வைத்து பாரி அறக்கட்டளையின் அனுசரணையுடன், வறிய குடும்பங்களைச் சேர்ந்த க.பொ.த. சாதாரண தரத்தில் கல்வி கற்கின்ற மாணவர்களுக்கான 'பாரி சுயகற்றல் ஏடு' நூல்களும் வழங்கப்படவுள்ளன. ஆர்வலர்கள் அனைவரையும் இந் நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (அ)

# ஆளும்கட்சி தேர்தலுக்கு ஒருபோதும் அஞ்சவில்லை

## மகிந்த ராஜபக்ஷ கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 14

பல தரப்பினர் தம் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைத்தாலும் தேர்தலை நடத்துவதற்கு சிறிலங்கா பொதுஜன பெரமுன அஞ்சப்போவதில்லை என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன கிராம மட்டத்தில் பணியாற்றிய கட்சி என்பதனால் தமக்கு தேர்தலை கண்டு அச்சமில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

கிராமங்களில் வசிப்பவர்களின் அபிலாஷைகள், தேவைகள் மற்றும் விருப்பங்களை அங்கீகரிக்க பல அரசியல் கட்சிகள் தவறிவிட்டதாகவும் அவர் கூறினார். தொலைக்காட்சி மற்றும் பத்திரிகைகளில் மட்டும் பேசு வதன் மூலம் மக்களின் வாக்கு களை பெற்றுக்கொள்ள முடி யாது என்றும் மகிந்த தெரிவித்தார். (அ)

# தேர்தல் நடத்தினால் பாதிப்பு!

## கூறுகிறார் ரஞ்சித் சியாம்பலபிட்டிய

கொழும்பு, மார்ச் 14

உள்ளூராட்சித் தேர்தலை நடத்தினால் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை செயற்படுத்துவதில் பாதிப்பு ஏற்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியாம்பலபிட்டிய தெரிவித்தார்.

அத்தோடு மீண்டும் அத்தியாவசிய சேவை விநியோக கட்டமைப்பில் நெருக்கடி ஏற்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஆகவே பொருளாதாரத்தை முன்னிலைப்படுத்தி செயற்படுத்தவேண்டிய தேவை காணப்படுவதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியாம்பலபிட்டிய கூறினார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் இம்மாத இறுதிக்குள் கைச்சாத்திடப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

நாட்டில் நிதி நெருக்கடி தீவிரமடைந்துள்ள நிலையில் பொருளாதார மீட்சிக்கு அரசாங்கம் என்ற ரீதியில்



முன்னுரிமை வழங்கவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். (அ)

## தனியான...

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி கொலை குற்றச்சாட்டில் 32 வருட சிறையின் பின்னர் 6 பேர் உச்சநீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டனர். இவ்வாறு விடுதலையானவர்களில் றொபேர்ட் பயஸ், முருகன், ஜெயக்குமார், சாந்தன் ஆகியோர் இலங்கையர்களாவர். இவர்களை இலங்கைக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படுவதாகக் கூறப்பட்டபோதும், இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லை.

இந்த நிலையிலேயே றொபேர்ட் பயஸ் முதலமைச்சர் மு. க. ஸ்டாலினுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

கடந்த 6ஆம் திகதி இடப்பட்டு எழுதப்பட்ட அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிக்குண்டு 32 ஆண்டு கால கொடுஞ் சிறை வாசத்துக்கு பிறகு கடந்த 11.11.2022 அன்று உச்ச நீதிமன்றத்தால் ஆறு தமிழர்களும் விடுதலை செய்யப்பட்ட நிலையில், நான் உட்பட இலங்கையர்களான நான்கு பேர் திருச்சி சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டுள்ளதை தாங்கள் நன்றாக அறிவீர்கள்.

விடுதலை கிட்டியதும் சிறைவாழ்வு முற்றுப்பெற்று விட்டதாக பெரிதும் நம்பிக் கொண்டிருந்த எனக்கும் எனது குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் தமிழ் சொந்தங்களுக்கும் சிறப்பு முகாம் எனும் சித்திரவதைக்கூடத்தில் அடைக்கப்பட போகிறேன் என்பது தெரியவில்லை.

வெளியுலகம் நான் விடுதலை பெற்று மகிழ்வோடு வாழ்வதாக எண்ணிக் கொண்டிருக்க நானோ ஒவ்வொரு நாளும் வதைபட்டுக் கொண்டிருக்கிறேன். சட்டத்தின் பிடியிலிருந்து முழுமையாக விடுபட்டும் கூட இந்த நொடிவரை விடுதலையின் சுவையை என்னால் உணரமுடியவில்லை என்பதனை வேதனையோடு பதிவு செய்கிறேன்.

திருச்சி சிறப்பு முகாம் அலுவலகத்தில் உள்ள ஓர் அறையில் என்னையும் ஜெயக்குமாரையும் மற்றுமொரு அறையில் முருகனையும் சாந்தனையும் என அடைத்து வைத்திருக்கிறார்கள். உச்ச நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டு மூன்று மாதங்களுக்கு மேலாகிறது. இன்னும் சுதந்திர காற்றை சுவாசிக்க முடியவில்லை. சூரியனைக்கூட பார்க்க விடவில்லை. துவைத்த துணிகளை வெயிலில் உலர்த்தவும் அனுமதியில்லை. தங்கவைக்கப்பட்டுள்ள அறையிலேயே சமைத்துக்கொண்டு அங்கேயே உண்டு உறங்கவும் செய்கிறோம்.

சுவாசப் பிரச்னைகள் ஏற்பட்டு ஆஸ்துமா, இரத்த அழுத்தம் போன்ற நோய்களுக்கு ஆளாகியுள்ளேன். குறைந்தபட்ச உடல்நலனை பேண நடைபயிற்சி, விளையாட்டு என எதற்கும் அனுமதி கிடையாது. எப்போதும் ஒரே அறையில்தான் உள்ளோம். முகாமுக்குள் உலாவ விடுங்கள் எனக் கேட்டால் பாதுகாப்பைப் போலியாகக் காரணம் காட்டுகிறார்கள் அதிகாரிகள்.

எனது 32 ஆண்டுகால சிறை வாழ்வில் எத்தனையோ சிறைகளில் இருந்துள்ளேன். அங்கே எல்லாம் பலதரப்பட்ட மக்களோடு ஆண்டு கணக்கில் இருந்துள்ளேன். அப்போது எல்லாம் எந்த வித பாதுகாப்பு பிரச்னையும் எழுந்ததில்லை. உள்ளேயே நடமாடும் குறைந்தபட்ச சுதந்திரம் மறுக்கப்பட்டதும் இல்லை. ஆனால், சிறப்பு முகாமில் எல்லாம் தலைகீழாக இருக்கிறது. பெரும்பாலும் இங்கே எமது நாட்டைச் சார்ந்தவர்கள்தான் இருக்கிறார்கள். அவர்களாலேயே எமக்கு ஆபத்து எனக்கூறி உள்முகாமில் விடாமல் ஒரே அறையில் அடைத்து வைத்திருப்பது உள்நோக்கம் கொண்டதாகவே எண்ணத்தோன்றுகிறது.

பாதுகாப்பு எனும் பெயரில் நூற்றுக்கும் மேற்பட்ட பொலிஸாரை நிற்கவைத்து பெரும் நெருக்கடியை கொடுக்கிறார்கள். நான் இருந்த புழல் சிறையில் கூட இத்தகைய இறுக்கத்தை நான் என்றும் உணர்ந்ததில்லை.

சிறப்பு முகாமில் இருந்து விடுபட்டு அயல்நாட்டுக்கு செல்ல கோரிக்கை வைத்தால் அதற்கும் அதிகாரிகள் தரப்பில் இருந்து எந்தவித பதிலும் வருவதில்லை. அதுதொடர்பில் மூன்று வாரங்களுக்கு முன்பு எழுதிக் கொடுத்தும் இதுவரை எந்தப் பதிலும் வரவில்லை.

இங்கே எமக்கு பொறுப்பாக உள்ள வருவாய்த்துறை அதிகாரிகள் வரும்போது இதுபற்றி கேட்டால் மேல் அதிகாரிகள்தான் இதுபற்றி முடிவு செய்ய வேண்டும் என கைவிரித்து விடுகிறார்கள். பாதுகாப்புக்கு இருக்கும் அதிகாரிகளிடம் கேட்டால் அவர்களும் தங்களுக்கு எந்த அதிகாரமும் இல்லை என சொல்லிவிடுகிறார்கள்.

இவ்வாறாக ஒவ்வொன்றுக்கும் எல்லோரிடமும் கையேந்த வேண்டிய கையறுநிலை ஏற்படுகிறது. இதனால் உடல் நலமின்மையோடு பெரும் மன உளைச்சலுக்கும் ஆளாகியுள்ளேன். இத்தோடு அயல்நாடு செல்வதற்குரிய ஏற்பாடுகளை செய்து தருவதற்கு பல முறை கோரிக்கை வைத்தும் இதுவரை எந்தவித முன்னகர்வும் இல்லை.

தற்போது நாம் இருக்கும் நிலைபற்றி முதல்வர் ஆகிய தங்களுக்கு 29.12.2022, 24.01.2023 ஆகிய தேதிகளில் இருமுறை கடிதங்கள் எழுதியும் இதுவரை எந்த தீர்வும் கிடைக்கவில்லை.

இதனால் வேறு வழியற்ற சூழலில் எனது கோரிக்கையை நிறைவேற்றக் கோரி வரும் 08.03.2023 தேதி முதல் பட்டினி போராட்டத்தை தொடங்க உள்ளேன். இதனைத் தெரிவிக்கவே மூன்றாவது முறையாக இக்கடிதத்தை எழுதுகிறேன் - என்று குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## உள்ளூராட்சி...

மின்சாரத்துறை மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.

கம்பஹா மினுவாங்கொடையில் அவர் பங்கேற்ற நிகழ்வு ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

## நாளை...

ஆசிரியர்கள், ஆசிரியர் உதவியாளர்கள் மற்றும் ஆசிரியர் ஆலோச கர்கள் ஆகியோர் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளனர். இதனால் அன்றைய தினம் கல்வி நடவடிக்கைகள் இடம் பெறாது - என்றும் அவர் கூறினார்.

இந்நிலையில், அன்றைய தினம் பெற்றோர் தமது பிள்ளைகளின் பாதுகாப்பை உறுப்படுத்த வேண்டும் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் கிழக்கு மாகாண இணைப்பாளர் பொ. உதயரூபன் தெரிவித்துள்ளார். (ஐ)

## அத்தியாவசிய...

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு ஊடாக சுகாதாரத்துறை அமைச்சுக்கு 50 கோடி டொலர் கிடைத்ததாக செய்தி வெளியாகி யுள்ளமை முற்றிலும் அடிப்படை யற்றதாகும்.

அந்த நிதி நிறுவனம் 50 கோடி டொலரை வழங்க கொள்கை ரீதியில் இணக்கம் தெரிவித்துள்ளது. ஆனால், 10 கோடி டொலர்களை மாத்திரமே வழங்கியுள்ளது. அத்தியாவசிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவும் பின்னணியில் புற்றுநோய் உள்ளிட்ட கொடிய நோய்களுக்கான மருந்துகளை அதிக விலைக்கு விற்பனை செய்ய அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளதாக வெளியான செய்தியும் அடிப்படையற்றது.

மருந்து இறக்குமதிக்கான விலை மனுகோரலுக்கு நிதி ஒதுக்கீடு தொடர்பில் திறைசேரியின் செயலாளர் தலைமையில் விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளது. விலைமனுக்கோரல் வெளிப்படைத்தன்மையுடன் இடம்பெறுகின்றது என்றும் அவர் கூறினார். (ஐ)

## மாகாண...

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உரிய காலத்தில் தேர்தல்களை நடத்தினார். ஆகவே, தேர்தலை கண்டு அச்சமடைய வேண்டிய தேவை எமக்கு கிடையாது. உள்ளூராட்சி மன்றத் தேர்தல் குறித்து தற்போது கருத்துரைக்கும் எதிர்க் கட்சிகள் மாகாண சபை தேர்தலை மறந்து விட்டார்கள்.

நல்லாட்சி அரசாங்கம் மாகாண சபைத் தேர்தலை காலவரையறையின்றி பிற்போடுவதற்கு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க, எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோர் முழுமையான ஆதரவு வழங்கினார்கள்.

மாகாண சபைத் தேர்தல் சட்டத்தில் திருத்தம் மேற்கொண்டால் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதில் பெரும் சிக்கல் தோற்றம் பெறும் என பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் பாராளுமன்றத்தில் சுட்டிக்காட்டினார்.

மாகாண சபைத் தேர்தல் இடம்பெற்றால் பொதுஜன பெரமுன வெற்றி பெறும். ஆகவே, பொதுஜன பெரமுனவின் வெற்றியை தடுக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்து கொண்டு மாகாண சபைத் தேர்தல் சட்டத்தை நல்லாட்சி அரசாங்கம் திருத்தியமைத்தது.

மாகாண சபைத் தேர்தல் எப்போது இடம்பெறும் என்று குறிப்பிட முடியாத தன்மை காணப்படுகிறது. - என்றார். (ஐ)

## கிறிஸ்தவ...

வழிபாட்டுக்காக அவர் அழைக்கப்பட்டுள்ளார் எனவும் தெரிவிக்கப் பட்டது.

இதற்காக, நேற்று முன்தினம் காலை மட்டக்களப்பு நகருக்கு வந்த சந்தேக நபர், வை. எம். சி. ஏ. அருகேயுள்ள கிறிஸ்தவ சபைக்குள் தொப்பி அணிந்தவாறு கையில் பைபிளுடன் நடமாடியுள்ளார்.

அச்சமயம், ஆராதனையில் ஈடுபட்டிருந்தவர்கள் அவரில் சந்தேகமடைந்து அவரை பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இதையடுத்து கைது செய்யப்பட்ட நபரை மட்டக்களப்பு நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## சிறுபான்மை...

ஏறக்குறைய 44 வருடங்களாக நம்மை போட்டு பாடுபடுத்தும் சட்டம். இதை எதிர்கொண்டு, நம்மில் எத்தனையோ பேர் மாண்டு போனோம். இன்னும் எத்தனையோ பேர் சிறையில் வாழ்வை இழந்தோம் -இன்னும் இழந்தபடி இருக்கிறோம். எத்தனையோ குடும்பங்கள் அநாதரவாக வாடுகின்றன.

2006-2009 கொழும்பு மாநகரில் இந்த சட்டத்தை காட்டி வெள்ளை வானில், தமிழரை நாய் பிடிப்பதை போல் கடத்திக்கொண்டு போனார்கள். அதை எதிர்த்துப் போராடிய என்னையும் 2007ம் ஆண்டு ஒருமுறை கைது செய்தார்கள். கொலை செய்ய முயன்றார்கள்.

தமிழர்கள் 40 வருடங்களுக்கு மேல் தேசிய, சர்வதேச ரீதியாக இந்த பயங்கரவாத தடுப்பு சட்டத்தை சட்டத்தை எதிர்த்து போராடியதால் அது இன்று ஐ. நா. மற்றும் சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகளின் கவனத்துக்கும் வந்துள்ளது.

கடந்த சில மாதங்களில், வசந்த முதலிகே, சிறி தம்ம தேரர் போன்ற சில தென்னிலங்கை சிங்கள போராளிகளை இச்சட்டம் பதம் பார்த்துள்ளது. திடீரென தூக்கத்தில் இருந்து எழுந்து, வாகனம் பிடித்து, யாழ்ப்பாணத்துக்கு போய், அங்கே யாழ். பல்கலைக்கழக இளைஞர்களிடம், “பயங்கரவாத தடை சட்டத்தை எதிர்த்து நாம் போராடுகிறோம். நீங்களும் சேர்ந்து கொள்ளுங்கள்” எனக்கோருவது, 2023இன் மிகச் சிறந்த நகைச்சுவையாக தோன்றுகிறது.

ஆனால், அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்துக்கு, “இணைகறோம், ஆனால், எமது பிரச்னைகளையும் உள்வாங்குங்கள்”, என்று யாழ் பல்கலை மாணவர் ஒன்றிய இளைஞர்கள் சரியாகப் பதில் கூறியுள்ளார்கள் என நான் அறிகிறேன். யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்துக்கு என் பாராட்டுகள் - என்றார். (ஐ)

## யாழில்...

வீடு ஒன்றை சேதப்படுத்தி தீ வைத்து ஒன்றரைக் கோடி ரூபாய் பெறுமதியான சொத்துகளை சேதப்படுத்தியிருந்தது. இதுதொடர்பில் பொலிஸராரிடம் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதேபோல் நாவற்குழி பகுதியிலுள்ள எரிபொருள் நிலையம் ஒன்றின் மீது தாக்குதல் நடத்தியமை தொடர்பில் தேடப்பட்டு வந்த சந்தேக நபர்களே கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்கள், நவாலி, மானிப்பாய், காரைநகர், விசுவமடு பகுதிகளைச் சேர்ந்த 24 தொடக்கம் 26 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். (ஐ)

## தபால்மூல...

இதேநேரம், தபால்மூல வாக்குகளை அச்சிடுவதற்கு போதிய கால அவகாசம் இல்லை என அரசாங்க அச்சகப் பணிப்பாளர் கங்கானி லியனகேயும் தெரிவித்துள்ளார். இந்த சூழ்நிலையில் நாளைமறுதினம் (நாளை) புதன்கிழமைக்குள் தமது ஆணைக்குழு 50 கோடி ரூபாயை பெறமுடியாத பட்சத்தில் தபால்மூல வாக்களிப்பை ஒத்திப்போட நேரிடும் என்று நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

தேர்தலுக்கு 110 கோடி ரூபாய் தேவை. 20ஆம் திகதிக்குள் பணம் கிடைக்காவிடின் மீண்டும் நீதிமன்றத்துக்கு சென்று நிதியை திறைசேரி ஒதுக்கீடு செய்யாதது குறித்து முறையிடப்படும் என்றும் அவர் கூறினார். (ஐ)

## யாழ்....

சிவஞானம் சிறீதரன் எம். பியே பேசியிருந்தார்.

இப்படி ஈ. பி. டி. பி. கட்சியின் யாழ். மாவட்ட ஊடகப் பேச்சாளர் ஐயாத்துரை ஐங்கேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்த விடயத்தை அவர்கள் எமது தலைமையுடன் உரிய பொறிமுறையுடன் கையாண்டிருந்தால் நிச்சயம் சாதகமான சூழ்நிலை உருவாக வாய்ப்பிருந்திருக்கும் என்றும் கூறியுள்ளார்.

யாழ். மாநகர சபையின் முதல்வர் தெரிவு இழுபறி நிலைக்கு பலரும் பலதரப்பட்ட கருத்துகள் கூறிவருகின்றனர். ஆனால், அதனை முன்னெடுக்கும் யாழ். மாநகர சபையில் அதிக ஆசனங்களை கொண்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்புதான் மக்கள்மீது அக்கறை கொண்டு முயற்சிகளை மேற்கொண்டிருக்க வேண்டும்.

ஆனால், அவர்களுக்குள் இருந்த உட்பூசல்களால் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு என்ற போர்வைக்குள் தமிழரசு கட்சியின் பிடிக்குள் இருந்த கட்சிகள் இன்று தனித்தனியாக சென்றுள்ள நிலையில் அவர்களுக்குள் ஒருமித்த தெரிவு இருந்திருக்கவில்லை.

மாநகரின் மீது அவர்களுக்கு அக்கறை இருந்திருந்தால் எமது கட்சியுடன் அதிகார மட்டத்திலுள்ள பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனோ அல்லது அக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவோ அக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் சீ. வீ. கே. சிவஞானமோ பேசியிருக்க வேண்டும். ஆனால், எமது கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவின் பிரத்தியேக ஆலோசகருடன் தமது தெரிவான ஒருவரின் பெயரை கூறி ஆதரிக்குமாறு அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனே பேசியிருந்தார்- என்று நேற்று யாழ். ஊடக அமையத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கூறினார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# அடுத்த ஜனவரியில் ஜனாதிபதி தேர்தல்?

## பொது வேட்பாளராக ரணில்

கொழும்பு, மார்ச் 14

அடுத்த வருடம் ஜனவரி மாதம் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாட்டை அரசாங்கம் செய்து வருகின்றது என அரச உயர்மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த காரணத்தினாலேயே உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை அரசாங்கம் ஒத்திப்போடுவதற்குத் தயாராகின்றது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஓரிரு மாதங்களுக்கு முன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்த்தன மற்றும் பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷ ஆகிய மூவரும் ஒன்றிணைந்து ஆலோசனை நடத்தியுள்ளனர். ரணில் விக்கிரமசிங்கவைப் பொது வேட்பாளராக நிறுத்துவதற்கு மொட்டுக் கட்சியின் ஆதரவை பசிலிடம் கோரியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, ரணிலைப் பொது வேட்பாளராக நிறுத்துவதற்கு பசில் ராஜபக்ஷ பச்சைக்கொடி காட்டியிருந்தார் என்று தகவல் வெளியாகியுள்ளமை குறிப் பிடத்தக்கது. (அ)

# விமலுக்கு பிடியாணை!



கொழும்பு, மார்ச் 14

வழக்கு விசாரணைக்கு சமூகமளிக்காத பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவுக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச உள்ளிட்ட ஏழு பேருக்கு எதிராக கறுவாத் தோட்டம் பொலிஸாரினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு நேற்று விசார ணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போதே பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸவை கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்துமாறு கொழும்பு பிரதம நீதவான் பிரசன்ன அல்விஸ் பிடியாணை பிறப்பித்துள்ளார்.

கடந்த 2016ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் மனித உரிமைகள் ஆணையாளர் இளவரசர் சைட் அல் ஹுசைன் இலங்கைக்கு விஜயம் செய்தபோது, பிரதிவாதிகள் கொழும்பில் உள்ள ஐக்கிய நாடுகள் சபை அலுவலகத்துக்கு முன்பாக வீதிகளை மறித்தும், பொது மக்களுக்கு இடையூறு விளைவித்தும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் என பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்திருந்தனர்.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு அழைக்கப்பட்ட போது, சமூகமளிக்கத் தவறிய காரணத்தினால் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸவுக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. (அ)

# புதிய தமிழ்க் கூட்டணி அமைப்பதற்கு முயற்சி

## இராதாகிருஸ்ணன் தகவல்

கொழும்பு, மார்ச் 14

புதிய தமிழ் கூட்டணி ஒன்றை அமைப்பதற்கான முயற்சி தற்பொழுது முன்னெடுக்கப்படுவதாக மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித்தலைவருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்தார்.

மஸ்கெலியாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மலையக மக்கள் முன்னணியின் சர்வதேச மகளிர் தினத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

தமிழ் முற்போக்கு கூட்டணி, தமிழ் தேசிய கூட்டமைப்பு, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் ஏனைய அமைப்புகளை ஒன்றிணைத்து இந்தக் கூட்டணி அமைக்கப்படவுள்ளது.

தமிழ் மக்களின் ஒட்டுமொத்த பிரச்னைகளையும் நாட்டுக்கும் வெளிநாடுகளுக்கும் கொண்டு செல்வதே அதன் முக்கிய நோக்கம் என வேலுசாமி இராதாகிருஸ்ணன் கூறினார். அத்துடன், பெண்களின் பிரச்னைகள் தீர்க்கப்பட வேண்டுமானால் நாட்டின் ஜனநாயகத்தை நிலைநாட்ட வேண்டுமென வேலுசாமி இராதாகிருஸ்ணன் குறிப்பிட்டார். (அ)

# ஆர்ப்பாட்டக்காரர்களோடு காடையர்களும் களமிறக்கம்

## ஜனாதிபதி ரணில் குற்றச்சாட்டு



**கொழும்பு, மார்ச் 14**

**ஆர்ப்பாட்டக்காரர்களுக்குள் சில காடையர்களும் மறைந்திருந்து செயற்படுகின்றார்கள், காடையர்களும் அவர்களுக்கு உதவி புரிபவர்களுமே அரசாங்கம் மற்றும் பொலிஸார் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் கடந்த வாரம் இடம்பெற்ற போராட்டங்களின்போது காலாவதியான கண்ணீர்ப் புகைக் குண்டு பயன்படுத்தப்பட்டதாகவும், இரசாயனங்கள் பயன்படுத்தப்பட்டதாகவும், மலக்கழிவு நீரைப் பயன்படுத்தியே போராட்டக்காரர்கள் மீது நீர்தாரைப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்படும் கருத்துக்கள் தொடர்பில் கொழும்பு ஊடகம் ஒன்று எழுப்பிய கேள்விக்கே ஜனாதிபதி ரணில் இவ்வாறு பதிலளித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆர்ப்பாட்டக்காரர்கள் தடை உத்தரவுகளை மீறிச் செயற்படும்போதும், அவர்கள் வன்முறைகளில் ஈடுபடும் போதும்நீர்த்தாரைப் பிரயோகம் செய்து, கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசி அவர்களைக் கலைக்கும் முழுச் சுதந்திரம் பொலிஸாருக்கு உண்டு. அதற்கு எதிராக எவரும் போர்க்கொடி தூக்க முடியாது.

பொலிஸாரின் நீர்த்தாரைப் பிரயோகம் மற்றும் கண்ணீர்ப்புகைக் குண்டுகள் தொடர்பில் சில தரப்பினரால் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களை அடியோடு மறுக்கின்றேன் - என்றார். (அ)

# சுகாதாரத்துறை 3 உயரதிகாரிகளுக்கு மனித உரிமை ஆணைக்குழு அழைப்பு

கொழும்பு, மார்ச் 14

சுகாதார அமைச்சின் செயலாளர், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மற்றும் தேசிய ஔடத ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் தலைவர் ஆகியோரை நாளை புதன்கிழமை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

அத்தியாவசிய ஔடத தட்டுப்பாடு, விலை அதிகரிப்பு மற்றும் சத்திர சிகிச்சைகள் மட்டுப்படுத்தப்படல் போன்றவற்றால் மக்களின் மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக பொது உரிமைகள் தொடர்பான வைத்தியர்களின் தொழிற்சங்க சம்மேளனம் மற்றும் இலங்கை வைத்தியர் சங்கம் என்பன முறைப்பாடு செய்திருந்தன.

இந்த முறைப்பாடு தொடர்பிலேயே குறித்த மூவருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (அ)

# துறைமுக ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்



கொழும்பு, மார்ச் 14

அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய வருமான வரிக் கொள்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து துறைமுக தொழிற்சங்க ஊழியர்கள் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

இந்தப்போராட்டம் நேற்று இலங்கை துறைமுக அதிகார சபைக்கு முன்பாக இடம்பெற்றது. (அ)

# பியர் விற்பனை வீழ்ச்சி

கொழும்பு, மார்ச் 14

நாட்டில் பியர் விற்பனையில் பாரிய வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சில வகை பியர் உற்பத்திகள் காலாவதியாகும் காலத்தை நெருங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பியர் வகைகளின் விற்பனை சுமார் 30 வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது.

உள்நாட்டு மதுபான விற்பனை வீழ்ச்சியடைந்துள்ள நிலையில், உள்நாட்டு உற்பத்திகளை ஏற்றுமதி செய்வது குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருவதாக மதுவரித் திணைக்கள ஆணையாளர் நாயகம் சமன் ஜயசிங்க தெரிவித்தார்.

தற்பொழுது மதுபான ஏற்றுமதியினால் 22 பில்லியன் ரூபா வருமானம் கிடைக்கப் பெறுவதாகவும் இதனை 30 - 35 பில்லியன் ரூபா வரை அதிகரித்துக் கொள்ள திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 14.03.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.